
# பெண்ணே! நீ
## பெரியவள்தான்



பொ. சண்முகநாதன்

SI HY VIN-YAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

# பெண்ணே! நீ பெரியவள்தான்!

(நகைச்சுவைக் கட்டுரைகள்)

SITHY VINAYAGAR
ALAI WEST
CHUNNAKAM
LIBRARY

பொ. சண்முகநாதன்

தமயந்தி பதிப்பகம்
அச்சுவேலி

முதற் பதிப்பு: ஆனி 1971
உரிமை ஆசிரியர்க்கு

விலை ரூபா: 1–25

## உள்ளே.....


| | |
|---|---|
| பதிப்புரை | 3 |
| முதிப்புரை | 4 |
| என்னுரை | 9 |
| குடும்பாளுமன்றம் | 11 |
| பிழைப்புக்குச் சில வழிகள் | 20 |
| பெண்ணே! நீ பெரியவள்தான்! | 26 |
| புலவர் பொன்னம்பலம் பேசுகிறார் | 33 |
| கதைவாணன் கதை எழுதுகிறான் | 39 |
| இதோ ஒரு பத்திரிகை! | 43 |
| தொலைபேசி ஒரு தொல்லை | 47 |
| கல்வி அமைச்சரின் கவனத்துக்கு! | 52 |
| இப்படி எத்தனை ஐந்து சதங்கள் | 57 |
| நாற்பது நிமிட நாடகம் | 63 |
| திருமணப் பரிசு | 69 |
| பக்கத்து வீட்டு றேடியோ | 73 |


அச்சுப்பதிவு: சிவகுமரன் அச்சகம், அச்சுவேலி.

# பதிப்புரை

எமது பதிப்பகத்தின் முதல் வெளியீடாக திரு. பொ. சண்முகநாதனின் 'வெள்ளரி வண்டி'யை வெளியிட்டு வெற்றிகண்ட நாம் இப்பொழுது அவரது 'பெண்ணே! நீ பெரியவள்தான்!' என்ற இரண்டாவது நகைச்சுவைக் கட்டுரைத் தொகுதியை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

எழுத்துலகில் எத்தனையோ சண்முகநாதன்களைக் கண்ட தமிழ் மக்கள் 'நகைச்சுவைக்கோர் சங்குவேலி சண்முகநாதன்தான்' என்பதை ஒருமனதாக ஏற்றுக்கொள்வர். அத்தகைய பெருமைக்குரிய அவரது எண்ணக் கருவூலங்களைத் திரட்டித் தமிழ் மக்கள் மத்தியில் 'பெண்ணே! நீ பெரியவள்தான்!' என்ற பெயரில் உலவ விட்டிருக்கிறோம்.

அவரது முதல் முயற்சியாகிய 'கொழும்புப் பெண்'ணைத் தமிழ் மக்கள் ஆதரித்த பெற்றியைக் கண்டோம்; துணிவு ஏற்பட்டது. அவரது எழுத்துக்களுக்கு மக்களிடையே நல்லாதரவு இருப்பதால் தொடர்ந்தும் அவரது சில நூல்களை வெளியிட முடிவு செய்துள்ளோம் என்பதையும் இந்த இடத்தில் குறிப்பிடுகின்றோம்.

அந்த எண்ணம் திண்மைபெற இந்நூலைத் தமிழ் பேசும் மக்கள் பேராதரவு தந்து ஆதரிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இடுக்கண் வருங்கால் நகுவதற்கான நல்ல மாமருந்து திரு. பொ. சண்முகநாதனின் படைப்புக்கள்! அவற்றைப் படியுங்கள்! படித்துப் படித்துச் சிரியுங்கள்!

தமயந்தி பதிப்பகம், —புந்தோணி.
அச்சுவேலி.
20-6-71.

# மதிப்புரை

சிரிப்பு, மனிதகுலம் ஒன்றிற்கே தனி உரிமையான செயல். உள்ளத்தின் உவகையைச் சிரிப்பின் மூலம் வெளிக் காட்ட மனிதனலேயே முடியும். எனவே, நகைச்சுவை என்பது உவகைச்சுவையே. மனிதரது சகல முயற்சிகளும் இன்பத்திற்காகவும் மகிழ்ச்சிக்காகவுமே; இலக்கியங்களும் இவற்றிற்காகவே. சோகச்சுவை நிறைந்த இலக்கியங்கள் மனிதருக்கு உவகையைத் தருவனவல்ல; அவல உணர்வையே தருகின்றன. சோககீதங்கள் இனிமையானவை; என்றாலும் அவை மனதுக்கு நிறைவைத் தருவதில்லை. மனித மனதுக்கு நிறைவைத் தருவதே நல்லிலக்கியம்; சிறந்த நகைச்சுவைகள் நகைச்சுவை நூல்கள் - மனதுக்கு என்றும் நிறைவையே தருவன.

படிக்கும்போது உவகையையும், படித்து முடிந்து நினைக்குந்தோறும் சிரிப்பையும் தருவதே சிறந்த நகைச்சுவையாகும். ஒருவரை ஏளனம் செய்வது சிறந்த நகைச்சுவையல்ல: ஏளனத்துக்கு உரியவரையும் நகைக்க வைப்பதுதான் நல்ல நகைச்சுவை. 'தனக்கு நிகழாத வரையில் உலகில் நடப்பன யாவும் வேடிக்கையே' என்றார் ஓர் அறிஞர். (வில்றொகேஸ்) வீதியில் வீசப்பட்டிருந்த வாழைப்பழத் தோலில் தவறுதலாகக் கால்பதித்த ஒருவர், நடனமாடியபடி விழுவதைக் காண்பது பார்ப்போருக்கு வேடிக்கையாயும் நகைப்பிற்குரியதாயும் இருக்கிறது. ஆனால், விழுந்தவருக்கோ...?

எனவே, நகைச்சுவை என்பது வேறு; ஏளனம் அல்லது கேலி என்பது வேறு. 'நகைச்சுவை என்பது மனிதரிடையே தோழமையையும் களிப்பையும் ஏற்படுத்துவது; ஏளனம் என்பது கேட்போருக்கு மகிழ்வையும் எதிராளிக்கு வேதனையையும் தருவது' (லின் என்பார்). 'வரண்ட பாலைவனத்தில் மனிதன் மகிழ்வாக உட்காரும் பசும்சோலை போன்றது நகைச்சுவை' (லீ என்பார்) உண்மைதான்.

இன்றைய மனிதன் ஒவ்வொரு கணமும் வாழ்வின் போராட்டங்களிடையே புகுந்து வருகின்றான். வறுமை, நோய், தொல்லைகள் என்பன யாவும் மக்களிற் பெரும்பான்மையோரது வாழ்வைச் சாரமற்ற பாலைவனமாக்கியுள்ளன; நம்பிக்கை வரட்சி, ஏக்கம், அவலம் என்பன அவர்களது மனங்களில் குடியேறியுள்ளன. இவற்றையெல்லாம் ஒரு சில கணமாவது மறந்து, உவகை உலகில் திளைக்க வைக்கின்ற சக்தி நகைச்சுவைக்கே உண்டு; நல்ல நகைச்சுவையும் அதுவே.

*நகைச்சுவை இலக்கியமா?*

*இலக்கியத்தில் நகைச்சுவையா?*

இலக்கிய வடிவம் ஒன்றில் பல்வேறு சுவைகளிடையே நகைச்சுவையும் அளவோடு சேர்த்தே பரவலாகச் சித்திரிக்கப்படுகின்றது; இத்துறையில் கல்கி சிறப்பானவர். நகைச்சுவையையே இலக்கியச் சுவையாகக்கொண்டு, எழுதுபவர்கள் மிகமிகக் குறைவு. துமிலன், நாடோடி, சாவி, ரீ. பாக்கியநாயகம், பொ. சண்முகநாதன், சுந்தர் என்போர் இத்துறையில் குறிப்பிடத்தக்கவர்கள்; எனக்கும் இத்துறையில் ஓரளவு பரிச்சயமுண்டு.

'சிரிப்பதற்கு மட்டுமே நகைச்சுவை' என்ற கருத்து ஏற்றதாகாது; நகைச்சுவை சிந்திப்பதற்கு முரியதாக அமைய வேண்டும். வாசகனின் மனதில் அவலச்சுவையை ஏற்படுத்தி, தான் சொல்ல விரும்பும் கருத்தைப் பதியவைப்பதிலும், வாசகனின் மனதில் உவகைச்சுவையை ஏற்படுத்தி தான் விரும்பும் கருத்தைப் பதிய வைப்பது சிறப்பானது; முன்னது கப்பல் உடைந்து மரணப் போராட்டத்தில் தவிப்பவனுக்கு உயிர்தப்பக் கைக்கெட்டும் மரக்குற்றி போன்றது; பின்னது பாலைவனத்திடையே இளைப்பாற உதவும் பசுஞ் சோலையைப் போன்றது. இரண்டும் அவசியமே.

—இந்த அளவுகோலைக் கொண்டு அன்பர் பொ. சண் முகநாதனின் இந்நகைச்சுவை நூலைப் படித்தேன்.

ஃ சண்முகநாதனின் இந்நூல் படிப்போருக்கு உவகையை ஏற்படுத்தக்கூடியது.

ஃ படித்து முடித்ததும் மனநிறைவைத் தரக்கூடியது.

ஃ படிக்கும்போது ஒருவிதமான 'சொகுசு'ம் களிப்பும் ஏற்படுகிறது.

ஃ சிரிப்பதற்கு மட்டுமன்றி சிந்திப்பதற்குமுரிய அரிய கருத்துக்கள் இந்நூலிலுள்ளன.

ஃ சண்முகநாதனின் நகைச்சுவைகளில், சிறிது ஏளனமும் கலந்திருக்கிறது.

எழுத்தாளன் சமூகத்தைப் பொறுப்போடு நோக்கி எழுதவேண்டும்; சமூகத்தின் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டும் போதோ, சமூகத்தை தக்க வழியில் முன்நடத்தும்போதோ அவனது எழுத்தில் பொறுப்புணர்வு இருக்கவேண்டும். பொ. சண்முகநாதனின் இந்நகைச்சுவை நூல், சமூகத்தைப் பொறுப்புணர்வோடு நோக்கியே எழுதப்பட்டிருக்கின்றது. இந்நூலில் சமூகச்சீர்கேடுகள், தனிமனிதரின் குணவியல்புகள் (தனிமனிதரின் அறியாமையல்ல) ஆகிய இரண்டுமே கருப்பொருளாக அமைந்துள்ளன. குடும்பாளுமன்றம். பிழைப்புக்குச் சில வழிகள், இதோ ஒரு பத்திரிகை, நாற்பது நிமிட நாடகம் என்பவற்றில் சமூகத்தின் சீர்கேட்டினையும், புலவர் பொன்னம்பலம் பேசுகிறார், கதைவாணன் கதை எழுதுகிறான், பக்கத்து வீட்டு ரேடியோ என்பனவற்றில் மனிதரின் குணவியல்புகளையும் நகைச்சுவையோடு வாசகனின் மனதில் ஆசிரியர் பதியவைக்கின்றார். இந்நூலிலுள்ள பாத்திரங்கள் வெறும் சிரிப்பிற்குரியனவாக மட்டுமில்லை; கனமான விடயங்களை வெகு இலகுவாக எழுத்தில் பொதித்துள்ளார்.

❖ தாலியையும் அடைவு வைத்து ஈழத்தில், நூலொன்றை வெளியிடும் ஏழை எழுத்தாளனை, ஏமாற்றும் 'இலக்கியத் தொண்டர்கள்'—

❖ மதிப்பிற்குரியவர்களின் பெயரால் நிதிதிரட்டி வாழும் 'தமிழ்த் தொண்டர்கள்'—

❖ பேசவேண்டிய விடயத்தைக் கைநழுவவிட்டு சுய புராணம் பாடும் பேச்சாளர் பொன்னம்பலம்—

❖ பிரயாணியிடம் ஐந்து சதம் ஏமாற்றும் கொண்டக்டர்—

❖ வகுப்பில் கல்வி கற்பிக்காது நேரம் போக்காட்டும் ஆசிரியர்—

இப்படிச் சமூகத்தின் புரையோடிப்போன 'பாகங்களை'ச் சிரிப்பினூடே நமக்குக் காட்டும்போது, ஆசிரியரின் இதயம் அழுவதையும் புரிந்துகொள்ளலாம். படிக்கும்போது சிரிக்கின்ற நாம், சிந்திக்குபோதும் அழுகின்றோம்.

ஆபாசம், அங்கவீனம் ஆகிய இரண்டும் நகைச்சுவைக்குரிய கருப்பொருட்களாக இருக்கக் கூடாது என்ற எண்ணமுடையவன் நான்; சண்முகநாதனும் இக்கருத்துடையவர் போலும். அதனால்தான் இந்நூலில் இவை இரண்டுமில்லாதுள்ளன. ஆபாசத்தை நகைச்சுவையோடு கூறும்போது விரசமும், அங்கவீனத்தை நகைச்சுவையோடு கூறும்போது ஏளனமும் துயரமும் ஏற்படுகின்றன. அதீத கற்பனைகள் நகைச்சுவைக்குரியனவே,

நகைச்சுவை எழுத்தாளன் ஒன்றை மனதில் பதிய வைத்துக்கொள்ளவேண்டும். சமூகத்தின் ஒரு கூட்டத்தைப் பொதுப்பட ஏளனம் செய்யக்கூடாது; ஆனால் அக்கூட்டத்தின் ஒரு பாத்திரத்தை ஏளனம் செய்யலாம். பெண்களைப் பொதுப்பட ஏளனம் செய்யக்கூடாது. ஆனால், ஒரு கமலாவையோ விமலாவையோ நகைச்சுவைப் பாத்திரமாக்கலாம்!

ஆசிரிய கூட்டத்தைப் பொதுப்பட ஏளனம் செய்யக்கூடாது; ஆனால், யாராவது ஒரு ஆசிரியரை ஏளனத்துக்குரிய பாத் திரமாக்கலாம்.

சண்முகநாதனின் எழுத்துநடை வாசிப்போருக்குக் களைப்பை உண்டாக்காது, படிப்போரைச் சோர்வடையச் செய்யாது, ஆற்றொழுக்காக அமைந்துள்ளது.

நகைச்சுவை வளரவேண்டிய கலை; சண்முகநாதன் போன்றோரால்தான் வளரவும் முடியும். சண்முகநாதனின் முதல் நகைச்சுவை நூலான 'கொழும்புப் பெண்'ணை அடுத்து இந்நூல் வெளிவருகின்றது. முதல் நூலிலும் பலமடங்கு வெற்றியைச் சண்முகநாதனுக்கு இந்நூல் தரும் என்றே நம்புகிறேன்.

வாழ்க. வளர்க!

40, கல்லூரி வீதி, — செங்கை ஆழியான்.
யாழ்ப்பாணம்.
15-6-71

# என்னுரை

சில மாதங்களுக்குமுன் ஒரு பெண்மணி என்னைக் கேட்டாள்—

''உங்களுடைய அடுத்த நூல் என்ன?''

''பெண்ணே! நீ பெரியவள்தான்!''

''அதைக் கேட்கவில்லை! நீங்கள் வெளியிடப்போகும் அடுத்த நூல்...?''

''அதைத்தான் சொன்னேன்! அப்படி ஒரு நகைச்சுவைக் கட்டுரைத் தொகுதிதான் என்னுடைய அடுத்த வெளியீடு.''

''அதாவது அப்படி நூலுக்குத் தலைப்பிட்டுவிட்டு உள்ளே எங்களையெல்லாம் 'வாங்கு வாங்கு' என்று வாங்கியிருப்பீர்கள். அப்படித்தானே?''

''என்னவோ அதைத்தான் நீங்கள் படிக்கப் போகிறீர்களே! அப்பொழுது எல்லாம் புரிந்துவிடுமே!''

''நான்தான் அதை வாங்கப்போவதில்லையே!''

''இரவல் வாங்கிக்கூடவா படிக்க மாட்டீர்கள்?''

''இல்லை! இல்லை! இல்லை! நீங்களும் உங்கள் நூலும்! உமக்குப் பெண்களை விட்டால் எழுதுவதற்கு வேறு பொருளே கிடையாதா? பெண்களைக் கேலிசெய்து எழுதுவதுதான் நகைச்சுவை என்ற நினைப்போ...?''

''பிரேக்' - அதாவது கொஞ்சம் நிறுத்துங்கள். யார் அப்படிச் சொன்னது? அந்தநூலில் பெண்கள் பற்றிய-பெண்கள் சம்பந்தப்பட்ட கட்டுரைகள் ஆக இரண்டே இரண்டுதான் இடம்பெறப்போகிறது. ஏனைய பத்துக் கட்டுரைகளும் அநேகமாக ஆண்களையே கேலிசெய்து எழுதப்பட்டவைகள். என்னை நானே கேலிசெய்து எழுதிய கட்டுரைகளும்கூட உண்டு.''

''இதெல்லாம் உண்மையா அல்லது யாவும் கற்பனையா?''

''யாவும் முழுக்க முழுக்க உண்மை! அதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம்.''

''அப்படியானுல் நானும் நிச்சயமாக உங்களின் அந்த நூலை வாங்கிப் படிப்பேன்.''

'பெண்ணே! நீ பெரியவள்தான்! என்ற இந்நூலுக்கு பெண்களிடையே ஆதரவு கிடைக்கமாட்டாது: தன்மானமுள்ள எந்த ஒரு பெண்ணும் இதனைத் தொடவும் மாட்டாள்'என யாராவது சொன்ஞல் அது எவ்வளவு தவருன கருத்து என்பதை விளக்கவே மேற்படி பழைய சம்பவம் ஒன்றை இங்கு சொல்லிக் காட்டினேன்.

இந்நூலுக்கு 'மதிப்புரை' வழங்கியுள்ள பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியானையும், நூலினை அச்சிட்டு வெளியிடும் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட நண்பர் புத்தொளியையும், அட்டைப்படம் வரைந்து தந்துள்ள ஓவியர் திரு. வி. கனகலிங்கத்தையும் (வி. கே.) இந்த இடத்தில் நான் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். கலைச்செல்வி 'சிற்பி' ஐயா, எனது சகோதரன் திரு. ஆ. விஞயகமூர்த்தி, நண்பர் மா. கந்தசாமி ஆகியோர்களும் இந்த நூல் விவகாரத்தில் எனக்குப் பல வகைகளில் ஆலோசனைகளும் உதவிகளும் நல்கியுள்ளார்கள். இவர்களும் என் நெஞ்சில் என்றும் நீங்கா இடம்பெற்றவர்கள்.

இனி நீங்கள் உள்ளே போங்கள்! நான் விடைபெறுகிறேன்! வணக்கம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய் (இலங்கை)
20-6-71.

அன்புள்ள,
**பொ. சண்முகநாதன்**

# குடும்பாளுமன்றம்

| | | |
|---|---|---|
| **கனகசபை** | - | ஆண் கட்சித் தலைவர் |
| **சிவக்கொழுந்து** | - | (கனகசபையின் மனைவி) |
| | - | பெண் கட்சித் தலைவி |
| **நடராசன்**<br>**சிவகுரு**<br>**மயில்வாகனம்**<br>**இரத்தினம்** | } | கனகசபை தம்பதிகளின் ஆண் மக்கள். |
| **கமலா, விமலா** | - | கனகசபை தம்பதிகளின் பெண் பிள்ளைகள் |
| **காந்தா** | - | நடராசனின் மனைவி |
| **வேலாயுதம்** | - | வேலைக்காரப் பையன் |
| **வள்ளிப்பாட்டி** | - | கனகசபையின் தாயார் |
| **கட்சி நிலை** | - | ஆண் கட்சி 6 |
| | | பெண் கட்சி 5 |

நண்பகல் உணவுக்குப்பின் கனகசபை வீட்டின் நடுக் கூடத்தில் குடும்பாளுமன்ற வாராந்தக் கூட்டம் வழக்கம்போல் ஆரம்பமாகியது. முதல் நிகழ்ச்சியான கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்கள் தங்கள் கேள்விகளை சபையில் சமர்ப்பித்தனர்.

ஆண் கட்சி உறுப்பினர் சிவகுரு, தலைவரிடம் கேட்ட கேள்வியாவது: (அ) இந்த வீட்டில் அம்மாவுக்கும் அண்ணிக்குமிடையில் அடிக்கடி 'மாமியார் - மருமகள்' யுத்தம் நடப்பதை கனம் அப்பா அறிவாரா? (ஆ) அப்படி அறிவாரானால் யுத்தத்தை நிறுத்த அவர் ஏதாவது நடவடிக்கைகள் எடுப்பாரா? (இ) 'ஆம்' என்றால் என்ன நடவடிக்கை? (ஈ) 'இல்லை' என்றால் ஏன்?

கனகசபை சிவகுருவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் '(அ) மாமியார் - மருமகள் யுத்தம் ஏனைய குடும்பங்களைப் போல் இங்கும் அடிக்கடி நடைபெறுவதை ஏற்கனவேயும் பல உறுப்பினர்கள் எனது கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் (ஆ) இதுபோன்ற யுத்தங்கள் உலக இயற்கைதான் என்றாலும் இங்கு அவை மேலும் நடைபெறாதிருக்க ஏற்ற நடவடிக்கை எடுக்க எண்ணியுள்ளேன். (இ) யுத்தங்கள் எதற்காக ஏற்படுகின்றன? எப்படி ஏற்படுகின்றன? 'மாமி - மருமகள்' இவர்களில் யுத்தத்துக்கு மூலகாரணம் யார்? என்பவைகளை எல்லாம் ஆராய்ந்து எனக்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்குமாறு இரத்தினம், விமலா, வேலாயும் ஆகியோர்களைக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கிறேன். இக்குழுவின் அறிக்கையைக் கொண்டு யுத்தத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கலாம் எனவும் நினைக்கிறேன். (ஈ) மேற்படி ஆ, ஆ, இ கேள்விகளுக்கான பதில்களின்பின் இக்கேள்விக்கு அவசியமில்லை' என்றார்.

மயில்வாகனம் தலைவரைக் கேட்ட கேள்வியாவது: (அ) அம்மாவுக்கும் அக்காமார்களுக்கும் ஏராளமான சிநேகிதிகள் இருப்பதையும் அவர்கள் எல்லாரும் அடிக்கடி இங்கு படையெடுப்பதையும் கனம் அப்பா அறிவாரா? (ஆ) அவர்களின் படையெடுப்பால் இங்கு காப்பி, தேநீர், சோடா, வெற்றிலை போன்ற பொருட்களுக்குத் தினமும் ஏராளமாகப் பணம் செலவாவதையும் அவர் உணருவாரா? (இ) அநாவசியச் செலவுகளைக் குறைத்துச் சிக்கனமாக

வாழ வேண்டும் என அறிவுறுத்திவரும் அவர் இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிருர்?

கனகசபை, மயில்வாகனத்தின் மேற்படி கேள்விக்கு அளித்த பதிலாவது; (அ) பெண் கட்சித் தலைவிக்கும் பெண் கட்சி உறுப்பினர்களுக்கும் பல சிநேகிதிகள் இருப்பதையும் அவர்கள் எல்லாரும் இங்கு அடிக்கடி பட்டாளமாகப் படை எடுப்பதையும் நானும் அறிவேன் (ஆ) அதனுல் இங்கு அநாவசியச் செலவுகள் ஏற்படுவதை நானும் அவதானித்துள்ளேன் (இ) இவைகளைத் தடுக்கும் முதல் நடவடிக்கையாக 'வீட்டிலேயே எந்நேரமும் அடைந்து கிடக்கவேண்டும்' எனப் பெண் கட்சி உறுப்பினர்களுக்கு இதுவரை விதித்திருந்த தடையை இதோ இப்பொழுதே நீக்கிவிடுகிறேன். (பெண் கட்சியினரிடையே பலத்த ஆரவாரம்) சிநேகிதிகளது வீடுகளுக்கு பெண்கட்சி உறுப்பினர்களைப் போவதற்கு அனுமதி அளிப்பதன்மூலம் இனிமேல் இங்கு அவர்களது வருகை கணிசமான அளவில் குறையும் என எதிர்பார்க்கிறேன். அத்துடன் கைச்செலவுக்கென இதுவரை பெண் கட்சித் தலைவியிடம் கொடுத்துவந்த பணத்தையும் பாதியாகக் குறைக்க முடிவு செய்துள்ளேன். (ஆண் கட்சியினரிடையே மகிழ்ச்சி ஆரவாரம்)

இதையடுத்து கமலாவும் விமலாவும் கேள்விகள் கேட்பதற்காக வீராவேசத்தோடு ஒரே சமயத்தில் எழுந்தனர். இந்த நேரத்தில் ஆண் கட்சி உறுப்பினர்கள் ஒரே குரலில் 'கேள்வி நேரம்' முடிந்து விட்டதெனக் கூச்சலிட்டனர்.

கமலா: இது வெறும் ஏமாற்று வஞ்சனை-கையாலாகாத்தனம்!

விமலா: வெட்கம்! வெட்கம்!

கேள்வி நேரத்தை அடுத்து உறுப்பினர்கள் சிலரின் தீர்மானங்கள் மீது விவாதம் நடைபெற்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டன. இந்த நேரத்தில் கனகசபை சிறிது தூங்கி வழிகிருர்.

சிவக்கொழுந்து; கனம் குடும்பத் தலைவர் கூட்டத் தொடரின் அரைவாசி நேரத்தில் தூங்கி மூஞ்சியாக காணப் படுகிருர்.

மயில்வாகனம்: எதிர்க்கட்சித் தலைவி தலைவரை இப் படி அவமானப்படுத்தலாமா?

ஆண் கட்சி உறுப்பினர்கள்; (ஒரே குரலில்) கூடாது; கூடாது! அவர் அந்த வார்த்தையைத் திரும்பப் பெற வேண்டும்.

சிவக்கொழுந்து; இதோ திரும்பப் பெறுகின்றேன். (புன்னகை பூத்தவாறு) கனம் குடும்பத் தலைவர் கூட்டத் தொடரின் அரைவாசி நேரத்தில் தூங்கு மூஞ்சியாக இருக் கவில்லை!

தீர்மானங்களில் முதலாவதாக மயில்வாகனம், குடும் பாளுமன்றக் கூட்டம் ஒவ்வொரு வாரமும் கூட்டப்பட வேண்டும் என்ற குடுபாளுமன்ற அமைப்பு விதியினை, ஒவ் வொரு மாதமும் என மாற்றி அமைக்கவேண்டும் என்ருர். இதையிட்டு அவர் பேசுகையில் ஒவ்வொரு வாரமும் கூட்டம் நடைபெறுவதால் ஒவ்வொரு வாரமுமே அப்பா அண்ண ஆகியோர்களது பகல் தூக்கம் பாதிக்கப்படுவதாகவும், வாரத்தில் ஒரு நாள் மட்டுமே அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய அந்தப் பாக்கியத்தை இழந்துவிடுவதால் அவர்களது உடல் நலனும் உள நலனும் ஒருங்கே பாதிக்கப்பட்டுவிடும் எனத் தாம் அஞ்சுவதாகவும் கூறினர்.

இதனை வழிமொழிந்து பேசிய இரத்தினம், ஒவ்வொரு வாரமும் கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டி இருப்பதால் தம்மால் இரண்டு முப்பது பகல் காட்சிக்குப் போகமுடி யாமல் இருப்பதாகவும், இரவுக் காட்சிகளுக்குப் போகலாம் என்ருலோ இதனல் தமது படிப்புப் பாழாகிவிடுமே எனப் பயப்படுவதாகவும் கூறினர்.

தீர்மானம் இறுதியில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது ஆதரவாக ஆறு வாக்குகளும் எதிராக ஐந்து வாக்குகளும் பெற்று நிறைவேறியது.

சிவக்கொழுந்து: ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். வேலாயுதம் வாக்களிப்பில் கலந்து கொண்டது சட்டப்படி செல்லுபடியாகாது.

நடராசன்: தவறு! வேலாயுதம் வேலைக்காரனாக இருந்தாலும் பலகாலமாக அவன் எங்கள் குடும்பத்தின் சுக துக்கங்களில் பங்கேற்கும் ஒருவனாக - குடும்பத்தின் ஓர் அங்கமாக இருந்து வருகிறான். எனவே அவன் சபை நிகழ்ச்சிகளிலோ வாக்களிப்பிலோ கலந்து கொள்வது தவறாகாது.

[ஆண் கட்சியினரிடையே பலத்த கையொலி]

காந்தா: நாம் அடுத்த வீட்டுப் பெண்களையும் அடுத்த கூட்டத்துக்கு கூட்டி வரலாமா?

சிவகுரு: அப்படியானால் நாமும் அடுத்த வீட்டு ஆண்களை கூட்டி வருவோம்!

[சபையில் பலத்த சிரிப்பு]

ஒப்பனைப் பொருட்களுக்காக ஒதுக்கப்படும் பணம் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும், மேற்படி பொருட்களை வாங்கும் அதிகாரம் ஆண் கட்சியிடம் இருந்து பெண் கட்சிக்கு மாற்றப்பட வேண்டும் என்றும் கோரும் தீர்மானம் ஒன்றை பெண் கட்சித் தலைவி கொண்டு வந்தார். இத்தீர்மானத்தின் மீது அவர் பேசுகையில் 'பெண்களுக்கெனத் தினம் தினம் எத்தனையோ அலங்காரப் பொருட்கள் வந்த வண்ணமாக இருக்கின்றன. ஆனால் அவைகளை வாங்குவதற்கென இந்தக் குடும்பத்தில் ஒதுக்கப்படும் பணத்தை நினைக்கும்போது 'யானைப் பசிக்குச் சோளப்பொரி' கொடுத்த கதைதான் எமக்கு ஞாபகத்துக்கு வருகிறது. இந்தப் பத்தாம் பசலி வழக்கம் நீக்கப்பட்டு அதிக பணம் இத்தேவை

களுக்காக ஒதுக்கப்பட வேண்டும். அத்துடன் அந்தப் பணத்தைச் செலவிடும் அதிகாரமும் ஆண்களிடம் இருக்கக் கூடாது. பெண்களுக்கு என்னென்ன அலங்காரப் பொருட்கள் தேவை, அவைகளின் சிறப்பு யாவை, அவசியம் என்ன என்பவைகளெல்லாம் கேவலம் ஆண்களுக்குத் தெரிய நியாயமில்லை. 'பாம்பின் கால் பாம்பறியும்' என்பது பழமொழியன்றோ!' என்றார்.

தலைவி தொடர்ந்து பேசுகையில் கடந்த ஒரு மாத காலமாக அநியாயக்காரர்களிடம் அதிகாரம் சிக்கியிருக்கும் காரணத்தால் கியுடெக்ஸ், ஐடெக்ஸ், லிப்ஸ்டிக்ஸ் புட்டிகள் யாவும் காலியாக இருக்கும் அவல நிலையினை எடுத்து விளக்கினார்.

இத்தீர்மானத்தை வழிமொழிந்து பேசிய காந்தா அவர்கள் ஒப்பனைப் பொருட்களின் அவசியத்தை இன்னொரு கோணத்திலிருந்து எடுத்துக் கூறி விட்டு, 'இரக்கப் போனாலும் சிறக்கப் போ' என்ற பழமொழியையும் நினைவூட்டினார்.

தலைவர்:- மதிப்புக்குரிய வெண்கட்சி நண்பர்கள் இரக்கப் போக வேண்டியதில்லை. அதெல்லாம் எமது குடும்பக் கௌரவத்துக்கும் அழகில்லை.

சிவகுரு:- அவர்கள் வேண்டுமானால் ஐடெக்ஸ், கியுடெக்ஸ், லிப்ஸ்டிக்ஸ் போன்றவைகளை பக்கத்து வீடுகளில் இரக்கலாம் அல்லவா?

(சபையில் சிரிப்பு)

தலைவர்:- ஆம்! தாராளமாக......!

(சபையில் மீண்டும் சிரிப்பு)

இரத்தினம்:- சண்டைக்காரர்கள் சபையில் ஒற்றுமையாகத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

கமலா;- எமக்குள் ஆயிரம் வேற்றுமைகள் இருக்கலாம்! நாங்கள் எமக்குள் சண்டையிட்டுக் கொண்டாலும் பொது விரோதியைச் சாடும் போது ஒற்றுமையாகவே நிற்போம்!

இத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது ஆதரவாக நாலு வாக்குகளும் எதிராக ஏழு வாக்குகளும் பெற்றுத் தோல்வியடைந்தது. பெண் கட்சி உறுப்பினர்களில் ஒருவரான வள்ளிப்பாட்டி ஆண் கட்சியுடன் சேர்ந்து வாக்களித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிவக்கொழுந்து;- (வள்ளிப் பாட்டியை நோக்கி) கூட இருந்தே குழிபறித்த மோசக்காரி!

கமலா:- பெண் இனத் துரோகி!

விமலா;- காக்கை வள்ளி!

(வள்ளிப் பாட்டி சபையைவிட்டு வெளிநடப்புச் செய்கிருள்)

சிவக்கொழுந்து:- இச்சபையில் இன்று நான் பெண் கட்சி சார்பில் அதிகம் பேசவேண்டி இருக்கிறது. இங்கு வரவர ஆண் கட்சியினரின் அட்டகாசமும் அதிகாரமும் அளவுக்கு மீறிக் கொண்டு போகிறது. பெண் கட்சியினராகிய எமது குரல் இங்கு மதிக்கப்படுவதில்லை. ஆண் கட்சியினராகிய உங்களுக்குப் பெரும்பான்மை பலம் இருக்கிறது என்ற ஒரே காரணத்தால் நீங்கள் நினைத்ததை நினைத்தவாறு சாதித்து வருகின்றீர்கள். எமது நியாயமான கோரிக்கைகள் கூட இங்கு மதிக்கப்படுவதில்லை.

நாங்கள் எது சொன்னாலும் எது செய்தாலும் அதெல்லாம் தவருனவை - தேவையற்றவை என்கிறீர்கள். நீங்களோ எது சொன்னாலும் எது செய்தாலும் அதுதான் சரியாகிறது - சட்டமுமாகிறது! உங்களுக்குப் பெரும்

பான்மை பலம் இருக்கலாம். ஆனல் அதற்காக எங்களது நியாயமான கோரிக்கைகளையுமா நீங்கள் புறக்கணிக்க வேண்டும்?

மற்றவர்கள் இருக்கட்டும்! இந்தத் தலைவருக்குத்தான் புத்தி எங்கே போய்விட்டது? யார் யாருக்கு எது எது தேவை, எது எது தேவையில்லை, யார் சொல்லுவது நியாயம், யார் சொல்லுவது அநியாயம் என்பவைகளை யெல்லாம் சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்கும் அறிவு அவருக்கு வேண்டாமா? ம்... அவரைச் சொல்லி என்ன பயன்! அவ ருக்குத்தான் மண்டையில் ஒன்றுமே இல்லையே...

தலைவர்;- என்ன சொன்னய்? யாரைப் பார்த்து அப்படிச் சொன்னய்?

(சபையில் கூச்சலும் குழப்ப நிலையும் உருவாகிறது)

சிவக்கொழுந்து:- நான் தலைவரது வெளி மண்டை யைக் குறித்துத்தான் அவ்வாறு சொன்னேன்.

தலைவர்;- (வெறுப்போடு) சரி! சரி! பேசவேண்டிய தெல்லாம் பேசியாகிவிட்டதுதானே!

சிவக்கொழுந்து;- இல்லை! இன்னும் இருக்கிறது. (தொடர்ந்து பேசுதல்) நாம் எது கேட்டாலும் அது அநா வசியம் என்கிறீர்கள். நீங்கள் மட்டும் உங்களுக்குத் தேவை யானது எல்லாவற்றையுமே அத்தியாவசியமானது என் கிறீர்கள். இந்தச் சபையில் நான் ஒன்றை மட்டும் உறுதி யாகவும் இறுதியாகவும் சொல்ல விரும்புகிறேன். சன நாயகத்தின் பெயரால் உங்கள் சர்வாதிகாரந்தான் இங்கு நடக்குமென்ருல் - ஒரு கண்ணுக்கு வெண்ணெயும் இன் னெரு கண்ணுக்குச் சுண்ணும்பும் என்ற நிலைதான் இங்கு தொடர்ந்தும் இருக்குமென்ருல் நாம் இந்தக் கூட்டங் களில் கலந்து கொள்வதிலே ஒருவித பயனும் இருக்கப் போவதில்லை. அதுமட்டுமல்ல......

இந்த நேரத்தில் சபையில் கோரமின்மை நிலவுவதை உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டினர், தலைவரால் வெளியே சென்றுவிட்ட உறுப்பினர்களை எவ்வளவு முயன்றும் திருப்பி அழைக்க முடியாமல் போகவே அவர் 'கூட்டம் இத்துடன் முடிவடைந்தது' என அறிவித்துவிட்டார்.

---

# பிழைப்புக்குச் சில வழிகள்

"வெறும் கதைகள் மட்டும் எழுதினால் போதுமா? நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குத் தீர்வு காண ஏதாவது வழிகள் சொன்னால் என்ன? நான்கு பேர்களுக்காவது வேலைகள் வழங்குவதற்கு உங்களிடம் ஏதாவது திட்டம் உண்டா?"

மேற்படி குண்டொன்றை நண்பரொருவர் என் தலையில் போட்டதும், நான் சிந்திக்கலானேன். புதிதாக வேலையில்லாத் திண்டாட்டத்திற்குத் தீர்வுகாண எனக்கு வழி தெரியாவிட்டாலும்-நாலு பேர்களுக்கு வேலை வழங்குவதற்கான புதுத் திட்டம் எதுவும் எனக்குத் தோன்றாவிட்டாலும் ஏதோ 'இல்லை' என்று சொல்லாமல் வழங்குவதற்கென்று சில வழிகளும் திட்டங்களும் என்னிடமும் இருக்கவே இருக்கிறது.

எனக்குத் தெரிந்த ஒருவரும் - எனது நண்பர்கள் இருவரும் எப்படி வேலையில்லையே என்ற கவலையைப்போக்கி எப்படியெல்லாம் வசதியோடு வாழ்கிறார்கள் என்பதைச் சொல்லுகிறேன். அவர்களது வழிகளையும் திட்டங்களையும் ஏன் 'வேலையில்லையே' என வருந்துபவர்களும் பின்பற்றக்

கூடாது? எந்தவித மூலதனமோ-விசேட தகுதிகளோ இல்லாது பின்பற்றக் கூடியதாக விளங்கும் அந்த மூவர் காட்டிய வழிகளை இதோ வேலை தேடுபவர்களின் சிந்தனைக்காக தருகிறேன்.

## முத்திரை வசூலித்து முன்னுக்கு வந்தவர்

அப்பொழுது நான் வேலை தேடிக்கொண்டிருந்த காலம். யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பெரிய கட்டடத்தின் ஓர் அறையில் குடியமர்ந்துகொண்ட ஒருவர், தினசரிப் பத்திரிகை ஒன்றில் ஒரு விளம்பரம் வெளியிட்டிருந்தார். அதில், எஸ். எஸ். சி. படித்த வாலிபர்களுக்காகப் பல வேலைகள் காலியாக இருப்பதாகவும், விண்ணப்பப் பத்திரங்களுக்கும் ஏனைய விவரங்களுக்கும் நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளும்படியாகவும் இருந்தது.

பின் கேட்கவா வேண்டும்? ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் விண்ணப்பித்தார்கள். என்னைப்போன்ற ஆர்வம் மிக்கவர்கள் சிலர் நேரிலேயே அங்கு போய் முற்றுகையிட்டோம். அங்கு வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் அதனைப் பூர்த்தி செய்து அனுப்பும்போது கூடவே ஒரு ரூபாய்க்கு அஞ்சல் கட்டளை அல்லது பத்துச் சத முத்திரைகள் பத்து இணைக்கும்படியும் கேட்கப்பட்டிருந்தது. (முத்திரைகளை அரசாங்கப் பரீட்சை விண்ணப்பங்களில் செய்வதுபோல ஒட்டியோ அதன்மேல் கையெழுத்திட்டோ பைத்தியக்காரத்தனம் செய்யவேண்டாம் என்றும் சொன்னார்கள்)

வேலை வழங்கப்போகும் அந்த ஆசாமியிடம் இந்த ஒரு ரூபாய் சங்கதிபற்றி விசாரித்தபோது அவர் தந்த பதில் எம்மைத் திருப்தி செய்தது. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் நேர்முகப் பரீட்சைக்கு ஆளை பதிவுத் தபாலில் அழைக்கவே அது எனச்சொல்லப்பட்டது.

அதன்பிறகு என்ன நடந்திருக்கும் என்பதைச் சொல்லவா வேண்டும்? வேலைக்காக கடல் கடந்த நாடுகளுக்கே விண்ணப்பங்கள் அனுப்பும் துணிச்சல் மிக்க நமது வாலிபர்களுக்கு ஒரு ரூபாய் ஒரு பொருட்டா? பத்துச் சத முத்திரைகளும், ஒரு ரூபாய்க்கான அஞ்சல் கட்டளைகளும் அந்த ஆசாமியின் அறையை நிறைத்தன.

இதெல்லாம் நடந்து இப்பொழுது மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. முறைப்படி விண்ணப்பங்கள் அனுப்பியிருந்த எனக்கோ எனது நண்பர்களுக்கோ அந்த நபரிடமிருந்து பதிவுத் தபால் அல்ல, ஒரு 'போஸ்காட்' கூட இதுவரை கிடைக்கவில்லை.

ஆனல், கடைசியாகத்தான் அறிந்துகொண்டேன். விண்ணப்பதாரர்களிடம் இருந்து முத்திரைகள் வசூலித்த அந்த ஆசாமிக்கு, அவைகளை விற்றதில் ஆயிரம் ரூபாய் வரை சேர்ந்ததாம். அவர் இப்பொழுது அதை மூலதனமாகக்கொண்டு தனக்கு நிரந்தரமான வேறு ஒரு வேலை தேடிக்கொண்டார். ஆசாமி ஏமாற்றுக்காரன்தான் என்றாலும், விண்ணப்பதாரர்கள் ஒரு ரூபாய்தானே போனல் போகட்டும் என்று விட்டுவிட்டார்கள். ஒரு ரூபாவுக்காக அவர்கள் என்ன வழக்கா போடுவார்கள்?

எப்படி இருக்கிறதுஇந்தப் பிழைப்பு? பின்பற்றக் கூடியதாகஇருந்தால் சரி, இல்லாவிட்டால் இருக்கவே இருக்கிறது இன்னும் இரண்டுவகைப் பிழைப்புக்கள்.

## இலக்கியத் தொண்டன்

மிக மிக எட்ட இருந்துவந்த நண்பர் ஒருவர், நான் முதன் முதலில் புத்தகம் வெளியிட்டதும் எனக்கு மிக மிகக்கிட்டவந்தார். எனக்கு யாருக்குமே இல்லாத ஓர் அபூர்வமான ஆற்றல் இருப்பதாக வியந்த அவர், நான் தமிழ் வளர்ச்சிக்காக ஏதோ மகத்தான சேவை செய்வதாகவும்

பாராட்டினர். அந்தச் சேவைக்குத் தன்னால் ஏதாவது உதவிகள் செய்யக் கூடியதாக இருந்தால் அதைத்தான் பெருமையுடன் ஏற்கத் தயார் என்றும் அந்த நண்பர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

இதுதான் சமயம் என்று அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்ட நான் ''உங்களைப் போன்ற எனது நண்பர்கள் ஒவ்வொருவரும் எனது நூலில் குறைந்தது ஐந்து பிரதிகளையாவது விற்பனை செய்துதந்தால்......'' என்றேன்.

''பூ...இதுவா பெரிய காரியம்? ஐந்து என்ன ஐம்பது பிரதிகளை உங்களுக்கு விற்பனை செய்து தருகிறேன்'' என்ற நண்பர் தான் எத்தனையோ எழுத்தாளர்களுக்கு அப்படி உதவி செய்ததாக ஒரு பட்டியலையும் வாசித்தார்.

எனக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை, ''உங்களைப் போன்ற இலக்கியத் தொண்டர்கள் இருக்கும்போது என் போன்றவர்கள் எதற்காகப் புத்தகம் போடுவதற்குத் தயங்க வேண்டும்?'' என்று சொல்லியவாறு ஐம்பது புத்தகங்களை பார்சலாகக் கட்டி நண்பரிடம் ஒப்படைத்தேன். விற்பனை யாளர்களுக்குக் கொடுப்பது போல அவருக்கும் இருபது வீத கழிவு தருவதாகவும் குறிப்பிட்டேன்.

கழிவைப்பற்றிச் சொன்னதுதான் தாமதம் நண்பருக்குப் பொல்லாத கோபம் வந்துவிட்டது. ''உம்முடைய கொமி சனை யார் ஐசே கேட்டது? ஏதோ நண்பராயிற்றே நல்ல காரியமாயிற்றே என்று உதவ வந்தால் இப்படியா 'கழி வை'ப் பற்றிப் பேசுவது?'' என்றார்.

இதெல்லாம் நடைபெற்று ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டன. புத்தகப் பணம் என்று சொல்லி ஒரு சதம்கூட அந்த நண்பர் என்னிடம் தரவில்லை. தற்செயலாக என்னைக் கண்டால் ''உம்முடைய புத்தகத்தை யார் ஐசே வாங்கு

கிறுன்?'' என்பார். சரி புத்தகங்களையாவது திருப்பித் தரலாமே என்று கேட்டால் அதற்கும் அலட்சியமான - அக்கறையற்ற ஒரு கைவிரிப்புத்தான் பதிலாகக் கிடைக்கும்.

கடைசியாகத்தான் நண்பரைப்பற்றிய உண்மை தெரிய வந்தது. அவருக்குப் பிழைப்பே இதுதானும்! புத்தகம் வெளியிடும் எழுத்தாளர்களுடன் எப்படியோ அறிமுகமாகி அவர்களுடன் ஐக்கியமாகி, ஆசை காட்டி, தேன் ஒழுகப் பேசி ஐம்பது பிரதிகள் பெற்றுக்கொள்வாராம்: அவைகளை விற்றுப் பிழைத்துக் கொள்வாராம்.

புத்தகம் வெளியிடும் எழுத்தாளர்கள் பலர் நட்டமடைவதுண்டு. ஆனுல் புத்தகம் விற்று இலக்கியத் தொண்டு புரியும் இவரோ பிழைத்து வருகிறுர்.

எப்படி இருக்கிறது இந்தப் பிழைப்பு? ஒரு வேளை சிலருக்கு இந்த இலக்கியத் தொண்டனைப்போல் புத்தகம் வெளியிடும் எழுத்தாளர்களுடன் அறிமுகமாகிப் புத்தகங்கள் பெறுவதில் சிரமம் இருப்பதாகத் தோன்றலாம். அப்படியானவர்கள் இதே வழிமுறைகளை, நாடகமன்றங்களுடன் அறிமுகமாகி, நாடக டிக்கற்றுக்கள் பெற்று விற்பனை செய்வதில் பின்பற்றலாமல்லவா?

அடுத்து, மூன்ருமவரை அறிமுகப்படுத்துகிறேன்.

## தமிழ்த் தொண்டன்

எனக்கு இன்னெரு நண்பர் இருக்கிருர், அவரது மூச்செல்லாம் பேச்செல்லாம் எங்கும் எப்பொழுதும் தமிழ் பற்றியதாகவும் தமிழ்த் தொண்டு பற்றியதாகவுமே இருக்கும்.

அந்த நண்பரின் அளவுக்கு அதிகமான தமிழ் ஆர்வமோ என்னவோ, அவருக்கு அடிக்கடி ஏதாவது தொண்டு செய்தாக வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். அதன்காரண

மாக 'அமரர் நினைவு மண்டப நிதி' என்றே 'அறிஞர் நினைவு மலர்நிதி' என்றே ஒன்றை அடிக்கடி ஆரம்பிப்பார். அதற்காக டிக்கட் புத்தகங்களும் அச்சிடுவார். அவைகளில் தலைப்பாக அமரர் பாரதியின் கவிதை ஒன்றிலிருந்து இரண்டு அடிகளை வேண்டுமென்றே முறித்து மறக்காமல் பொறித்து விடுவார். 'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்; நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்' என்பதுவே அந்த அடிகளாகும்.

இதன்பின் நண்பரின் தமிழ்த்தொண்டு தொடங்கி விடும். கடைப் படிகள், கனதனவான்களின் வீடுகள் எங்கும் ஏறி இறங்குவார்; பொற்குவைகளும் காசுகளும் சேர்த்து விடுவார். ஆனால்?

நானும்தான் எழெட்டு ஆண்டுகளாகக் கவனித்து வருகின்றேன். இந்த நண்பர் பத்துக்கும் மேற்பட்ட காரணங்களைச் சொல்லி பத்துக்கும் மேற்பட்ட நிதிகள் சேர்த்திருக்கிறார். ஆனால் எங்கும் எந்த ஒரு நினைவு மண்டபத்துக்கும் இதுவரை அடிக்கல் நாட்டப்பட்டதுபற்றி அறியேன். அதேபோல எந்த ஓர் அச்சுக்கூடத்திற்கும் 'நினைவு மலர்' நிமித்தமாக 'அட்வான்ஸ்' கொடுக்கப்பட்டது பற்றியும் தெரியாது.

ஆமாம் அப்படியெல்லாம் நண்பர் செய்திருப்பாரேயானல் 'தமிழ்த் தொண்டன்' என்ற பெயர் மட்டும்தான் அவருக்கு நிலைத்திருக்கும்' ஆனல் அவர்தான் பிழைக்கவும் தெரிந்தவராயிற்றே!

இதுவரை மூவர் காட்டிய வழிகளையும் சொன்னேன். வேலை இல்லாதவர்களுக்கு இந்த மூன்றில் ஒன்ருவது பின்பற்றக்கூடியதாக இருக்கும் என்றே நம்புகிறேன். இவைகளில் ஒன்றுகூட ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லையென்று அவர்களில் யாராவது சொன்னல் அவர்களைப் பிழைக்கத் தெரியாதவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். அவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதை விட வேறுவழியில்லை.

# பெண்ணே! நீ பெரியவள்தான்!

"பெண்களையெல்லாம் கேலியும்கிண்டலும் செய்து கதை கட்டுரைகள் எழுதிவரும் இந்த எழுத்தாளர் (அதாவது நான்) தனக்கு எப்படியான பெண்ணைத்தான் தேர்ந்தெடுக்கப் போகிறாரோ? அவளை எப்படி எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கப்போகிறாரோ?''

அவரிடம் (அதாவது என்னிடம்) அகப்படவிருக்கும் அந்தப் பரிதாபத்துக்குரிய பெண்ணுக்காக நாம் இப்பொழுதே எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்க வேண்டியதுதான்.

''போங்கோடி. நீங்கள் ஒன்று, அந்த ஆள் (நான்) ஏற்கனவே யாரோ ஒரு பெண்ணைக் காதலித்திருக்கவேண்டும் அதில் அவருக்கு மகத்தான தோல்வியும் ஏற்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் இப்படியெல்லாம் அவர் பெண்களை இழிவுபடுத்தி எழுதும் காரணமாக இருக்கவேண்டும்''

''அப்படியானால் அவர் (நான்) இனித் திருமணமே செய்து கொள்ளமாட்டாரோ?''

இப்படி ஓர் உரையாடல் தங்கள் விடுதிப் பக்கம் நடந்ததாக எனது பெண்வாசகி ஒருத்தி எனது கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிருள்.

மேற்படி உரையாடலிலுள்ள உண்மை பொய் ஒரு புறம் இருக்கட்டும். ஆனுல் எனது எழுத்து எவ்வளவு தூரம் உலகத்தின் கண்களாகிய பெண்களின் வெறுப்புக்கு இலக்காகி விட்டது என்பதையும், மலரினும் மெல்லியதான அந்த மெல்லியலாளர்களின் இதயத்தை எனது பேஞ எத்தனை தூரம் குத்திவிட்டதென்பதையும் உணர்ந்து வருந்தினேன். உடனேயே ஒரு முடிவுக்கும் வந்தேன்.

இப்பொழுதே இக்கணமே உலகத்தின் கண்களாகிய அந்த மெல்லியலாளர்களின் துயர் துடைக்க வேண்டுமென்பதே அந்த முடிவாகும். முதன் முதலாக எனது பேஞ இதோ பெண்ணின் பெருமை பற்றி எழுதுகிறது.

## கண்ணகி பரம்பரையின் கண்ணீர்

கண்ணகியின் கண்ணீர் மதுரையையே எரித்ததாக சிலம்பு கூறுகிறது. இது எவ்வளவு தூரம் உண்மையானது என்பதையல்ல இங்கு ஆராயப்போவது. கண்ணகி பரம்பரையின் கண்ணீரின் சக்தியையும், நினைத்த நேரத்தில் நினைத்ததைச் சாதிக்கும் அதன் திறனையுமே இங்கு ஆராயப்போகின்றேன்.

உலகத்தில் பொதுவாக எதிலும் ஆண்கள்தான் வல்லமையுள்ளவர்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனுல் இந்தக் கண்ணீர் விடுவதில் பெண்களை வெல்லுவதற்கு அவர்களால் ஒருபோதும் முடியாது. இதில் பெண்களுக்கு நிகர் பெண்களேதான் என்பேன்.

ஆண்களாகிய எங்களுக்கெல்லாம் நெருங்கிய உறவினர்கள் இறந்தால்கூட கண்ணீர் வருவது சிரமமாக இருக்கிறது. இழவு வீடுகளில்கூட அரசியல் சர்ச்சை

களில்தானே ஈடுபட்டு வருகிறோம். பெண்களால் 'கல் நெஞ்சங்கள்' என்ற பட்டத்தையும் அல்லவா பெற்று வருகிறோம்?

பெண்களோவென்றால் சொந்தம் பந்தம் என்ற வேறுபாடுகள் இன்றி எங்கும் எப்பொழுதும் கலன் கணக்கில் கண்ணீர் விட வல்லவர்களாகவும் தயாராகவும் இருந்து வருகிறார்கள். இழவு வீட்டை 'இழவு வீடு' தான் என்று நினைக்கும் படியாகச் செய்வது பெண்களேதான். சுருக்கமாகச் சொன்னால் பெண்களும் பறைமேளமும் இல்லாவிட்டால் இக்காலத்தில் இழவு வீட்டுக்கும் திருமண வீட்டுக்கும் வேறுபாடே காணமுடியாது.

இதைவிட பெண்கள் தமது 'கண்ணீர்' என்ற ஆயுதத்தால் தகப்பன்மரர்களையும், கணவன்மார்களையும் ஆட்டிவைத்து நினைத்ததைச் சாதிக்கும் வல்லமை இருக்கிறதே, அவைகளை எழுதப்போனால் கட்டுரை புராணமாகிவிடும்.

இது இவ்வாறு இருக்க நினைத்த நேரத்தில் பெண்களால் ஏராளமாகவும் தாராளமாகவும் கண்ணீர் விட முடிகிறதே! இது எதனால் தெரியுமா?

எனக்கும்கூட முன்பு இந்த மர்மம் புரியாமலே இருந்தது. பின்பு ஒரு சமயம் எதற்காகவோ நான் அழ நேர்ந்தபோது கண்ணீரை நக்கிச் சுவைக்கும் அனுபவம் ஏற்பட்டது. அப்பொழுது கண்ணீர் உப்புக் கரித்தது. அதன் பிறகுதான் எல்லாம் புரிந்தது. உப்புத்தான் கண்ணீருக்குக் காரணம் என்றும் பெண்களைவிட ஆண்கள் குறைவாகக் கண்ணீர் சிந்துவதற்கு பெண்களைவிட ஆண்கள் குறைவாக உப்பைப் பயன் படுத்துவதுதான் காரணம் என்றும் நான் தெரிந்து கொண்டேன்.

அப்படியானால் இந்தப் பெண்கள் எல்லாரும் சமையலறையிலே இருந்துகொண்டு சமைக்கும் போதெல்லாம் அடிக்கடி உப்புக்கற்களை தமது வாய்க்குள் போட்டுக் கொள்கிறார்களோ என்னவோ!

## கதைக் களஞ்சியங்கள்

ஆண்களாகிய எமக்கெல்லாம் நண்பர்கள் தெரிந்தவர்களைச் சந்திக்கும்போது கூடவே ஒரு பிரச்சினையும் ஏற்பட்டு விடுவது வழக்கம். அவர்களுடன் சம்பிரதாயத்துக்காவது ஏதாவது கதைத்தாக வேண்டுமல்லவா? 'எதுபற்றிப் பேசுவது? எப்படி அதை ஆரம்பிப்பது?' என்பது தான் அந்தப் பிரச்சினையாகும்.

நண்பர்கள் வரும்போது-தெரிந்தவர்கள் எதிர்ப்படும் போது எமக்கு ஏற்படும் இந்தத் தடுமாற்றத்திலிருந்து மீளுவதற்காகச் சில சமயங்களில் 'மெல்ல நழுவினுல்' கூட நல்லதுபோல் தோன்றும்.

அப்படித் தடுமாற்றத்திலிருந்து துணிந்து மீண்டு கதைக்க வெளிக்கிட்டோமோ, அதில் பைத்தியக்காரத் தனம்தான் இருக்கும்.

பாடசாலைக்குச் செல்பவரையோ பாடசாலையிலிருந்து வருபவரையோ பார்த்து பதில் நிச்சயமாகத் தெரிந்திருந்தும் 'என்ன பாடசாலைக்கா?' என்றே 'என்ன பாடசாலையிலிருந்தா?' என்றே கேட்டு வைப்போம்.

கடும் வெயிலும் அதிக புழுக்கமும் நிலவும் காலத்தில் 'ஏதோ புதிதாகக் கண்டு பிடித்ததுபோல் 'சரியான வெயில்! சரியான புழுக்கம்' எனத் திருவாய் மலருவோம்.

இதற்குப் பிறகும் ஏதாவது கதைப்பதாயிருந்தால் 'உங்கள் ஊரில் எப்படி இந்தமுறை மழை?' என்றே அல்லது 'அங்கு எப்படி வெள்ளாமை' என்றே கேட்போம்.

இப்படி அனுவசியமானதும் அக்கறையில்லாததுமான சங்கதிகளை சம்பிரதாயத்துக்கேனும் பேசத்தெரியாத ஆண்கள்பாடு மிகவும் பரிதாபந்தான். அவர்கள் வள்ளுவர் வழியில் 'கண்ணெடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்

சொற்கள் என்ன பயனுமில' என்பதையோ அல்லது 'யான் நோக்குங்காலை நிலன் நோக்கும் நோக்காக்கால் தானோக்கி மெல்ல நகுவதையோ' பின் பற்ற வேண்டியது தான்.

இந்தப் பிரச்சினைகளோ தொல்லைகளோ நமது மதிப்பிற்குரிய பெண்மணிகளுக்குக் கிடையாது. ஆளைக் கண்டவுடன் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது? என்ன பேசுவது என்பதில் எலலாம் அவர்களுக்குத் தடுமாற்றம் கிடையாது. இதெல்லாம் அவர்களுக்கு ஒரு கைவந்த கலையாக இருநது வருகின்றது.

நாம் 'எதைப் பேசுவது?' என்று தவிக்கிறோம். அவர்களோ 'எப்படி நிறுத்துவது?' என்று தெரியாது 'சமா' வைக்கிறார்கள்.

நாடாளுமன்றத்திலெல்லாம் தாம் ஆறு மணித்தியாலங்கள் பன்னிரண்டு மணித்தியாலங்கள் என்று பேசிப் பெரிய சாதனைகளை நிலைநாட்டிவிட்டதாக நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பெருமைப்படுகிறார்கள். ஆனால் நமது பெண்மணிகளைக் கேட்டால் 'பூ . இதென்ன சாதனையாம்?' என்று அலட்சியம் செய்து விடுவார்கள்.

பெண்களைக் கதைக்களஞ்சியங்கள் என்றே சொல்லி விடலாம். கதையைப் பொறுத்தவரை அவர்கள் பச்சைத் தண்ணீரிலும் பலகாரம் சுடுவார்கள்; வெறும் வாயையும் மெல்லுவார்கள். சுருக்கமாகச் சொல்லுவதாயிருந்தால் பேச்சுச் சுதந்திரத்தைத் தக்கபடி சரியாகப் பயன்படுத்துபவர்கள் அவர்களே!

எந்த நேரத்திலும் மடை திறந்த வெள்ளம்போல் நீண்டநேரம் கதைக்கவல்ல கதைக் களஞ்சியங்களான நமது பெண்களிடம், ஆண்களாகிய நாம் பிச்சை எடுக்க வேண்டியவர்களாகவே இருக்கின்றோம்.

## இரக்கப்போனாலும் சிறக்கப் போவார்கள்

'இரக்கப்போனாலும் சிறக்கப்போ': என்பது ஒரு பழமொழி. அந்த முதுமொழியை வரிக்குவரி கடைப்பிடித்து ஒழுகுபவர்கள் எமது மங்கையர் திலகங்களே என்றால், அதுவும் சிறிதும் மிகையல்ல.

மாலை ஆறுமுப்பது படத்திற்குப் போவதற்காகத் திட்டமிடும் நமது பெண்மணிகள், அது சாத்தியப்படாது, மிகப் பிரயாசைப்பட்டு இரவு ஒன்பது முப்பதுக்கே வியர்க்க விறுவிறுக்கத் தியேட்டரை வந்தடையும் காட்சிகளை நாம் காண்கிறோம் அல்லவா! இதற்கெல்லாம், அழகு செய்வதையும் அலங்காரம் பண்ணுவதையும் பெண்கள் ஒரு கலையாகவே வளர்த்து வருவதுதான் காரணமாகும்.

மரணச் சடங்குகளில் பெண்கள் வகிக்கும் முக்கிய இடம்பற்றி கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் இரக்க மட்டுமல்ல, இழவு வீடுகளுக்குக் கூட அவர்கள் சிறக்கவே போகவேண்டி இருப்பதால் அங்கெல்லாம் அவர்களில் சிலர் காலதாமதமாகவே சமூகம் கொடுப்பதையிட்டு நாம் மன்னித்தேயாக வேண்டும்.

மிக மிகச் சாதாரண அலுவல்களுக்கெல்லாம் பெண்கள் மிகமிகப் பிரமாதமான சோடனைகளுடன் புறப்படுவதைக் காண்கின்றோம், ஆனால் என்ன செய்வது, 'சிறக்கப் போ' என்ற பழமொழியினை அவர்கள் வரிக்கு வரி பின்பற்ற வேண்டியிருப்பதால் சுண்டங்காய் காற்பணமாகவும் சுமைகூலி (நகைகளும் சேலைகளும் பிறவும்) முக்காற்பணமாகவும் இருப்பதையிட்டு அவர்கள் கவலை கொள்ளுவதில்லை.

ஒவ்வொரு கொண்டாட்டங்கள் கேளிக்கைகளுக்கென்று வேறுவேறான ஆடைஅணிகள் அலங்காரச்

சாதனங்கள் பெண்களிடம் இருக்கும். ஏன் பெண்கள் வைத்திருக்கும் நூற்றுக்கணக்கான விலைமதிப்புள்ள சிலசேலைகள் அவர்களது வாழ்நாளில் ஆக இரண்டொரு சமயங்களில்தான் பாவிக்கப்படுகின்றனவாம் என்றால், அவர்களுக்கு சிறக்கப்போவதிலுள்ள மோகம் எத்தகையது' என்று நான் சொல்லித்தரன். நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமா என்ன?

இவ்வாறு பெண்ணின் பெருமை பற்றி எவ்வளவோ எழுதலாம். ஆனல் 'நீ ஆணுக இருந்துகொண்டே எதிரிகளின் புகழ்பாடும் எட்டப்பனுக இருக்கிருயே? பெண்களுக்கு அடிமையாகி அவர்களுக்காக வக்காலத்து வாங்குகிருயே பாவி' என்றெல்லாம் எனது இனிய ஆண் நண்பர்கள் சண்டைக்கு வரலாம். இதனுலேயே பெண்களின் ஏனைய பெருமைகள்பற்றி இங்கு சொல்லாமல் விட்டேன்.

# புலவர் பொன்னம்பலம் பேசுகிறூர்

"அன்பே உருவெடுத்தாற்போல் விளங்கும் அவைத் தலைவர் அவர்களே! மாரி மழைபோல் சொற்பொழி வாற்றவல்ல சக பேச்சாளர்களே! ஆன்றவிந்தடங்கிய பெரியோர்களே! குடும்பத் தலைவர்களே! குடுமிக்காரர் களே! வாலிபர்களே! வனிதையர்களே! சிறுவர்களே! சிறுமியர்களே! குழந்தைகளே!........ (இப்படி இன்னும் பல விளித்தல்கள். இடநெருக்கடியை உத்தேசித்து அவைகள் இங்கு விடப்பட்டுள்ளன.) உங்கள் அனைவருக் கும் எனது கரம் கூப்பிய - சிரம் தாழ்த்திய வணக்கங்கள் உரித்தாகுக!''

ஆண்டு விழா ஒன்றில் 'குறளின்பம்' பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்ற அழைக்கப்பெற்ற புலவர் பொன்னம் பலம் இப்படியாகத் தனது உரையை ஆரம்பித்தார். அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது:-

''அடியேனுக்கு எத்தனையோ வேலைகள் இருப்பினும் உங்கள் விழாக் குழுவினரின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாத அளவுக்கு உங்கள் மன்றத்தின் மீதும் இங்குள்ள

மக்கள்மீதும் எனக்கு அளவுக்கதிகமான பற்றும் பாசமும் உண்டு. அதுவே அடியேன் இப்பொழுது உங்கள்முன் எழுந்தருளக் காரணமாயிருந்தது.........''

(தான் ஒரு சாதாரண ஆள் அல்ல மிகப் பெரிய பிரமுகர் என்பதைச் சபையினருக்குக் காட்டுவான் வேண்டிப் புலவர் தன் பேச்சின்போதெல்லாம் வழக்கமாகக் குறிப்பிடும் ஓர் அவையடக்கம் இது.)

''உங்கள் வேண்டுகோளுக்கு என்னவோ அடிபணிந்துவிட்டபோதிலும் கடைசி நேரத்தில் உங்களை எல்லாம் நான் தாமதிக்க வைத்துவிட்டேன். ஆறு மணிக்கு இங்கு வருவதற்குச் சம்மதித்திருந்த போதிலும் எட்டு மணிக்கே வந்துசேர வேண்டிய அளவுக்கு சில இக்கட்டான நிலைமைகள் வழியில் ஏற்பட்டுவிட்டன. இந்த அழகில் இங்கு வருவதற்கு முன் ஏற்கனவேயும் இரண்டு கூட்டங்களுக்கு வேறுபோய் சொற்பெருக்காற்றி விட்டு வந்திருக்கிறேன்.........''

(புலவரை நீங்கள் மட்டுமல்ல வேறு சிலரும்கூட பேச அழைப்பதுண்டு என்பதை இப்படியாகச் சொல்லுகிறார்.)

''இருந்தபோதிலும் பங்குவலிட்டிக்குப் பெயர்போன நான் அந்த இரண்டு கூட்டங்களிலுமே குறிப்பிட்ட காலத்திற்குள் பேசி முடித்துவிட்டு உங்கள் மத்தியிலும் குறிப்பிட்ட காலத்தில் பேசுவதற்கென்றுதான் வந்துகொண்டிருந்தேன். ஆனால் அந்தோ...... ..வந்துகொண்டிருக்கும் போது இடைவழியில் எனது கார் பழுதாகிவிட்டது........''

(புலவரிடம் சொந்தத்தில் கார் இருக்கிறது என்ற செய்தியினை இப்படியாகச் சபையின் கவனத்திற்குக்கொண்டு வருகிறார். காருக்குப் புத்துயிர் வந்த கதையினை அவர் சொல்லியபின்–)

''காரின் பழுதுகள் யாவும் ஒருவாறுக முடிந்து சிறிது தூரம் போனதும் இன்ளெரு பேரிடி! அது என்னவெனில் நான் இங்கு வரவேண்டிய பாதையை டிரைவர் மறந்து விட்டு வேருெரு பாதையால் காரைச் செலுத்திக் கொண் டிருந்தது தெரியவந்தது. இதையெல்லாம் நினைக்கும்போது எனக்கு ஒரு கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது. அந்தக் கதையை உங்களுக்கும் சொல்ல விரும்புகிறேன்......''

(அந்தக் கதை உங்கள் எல்லாருக்கும் நன்முகத் தெரிந்த 'ஆவீன மழை பொழிய இல்லம் வீழ' என்ற பாடலின் கருத்தேயாதலால் அதனை இங்கு விட்டோம்.)

''நான் கேட்டார்ப் பிணிக்கும் தகைய பெரும் சொற் பொழிவாளன் அல்லன். வெல்லும் சொல் இன்மை அறிந்து பேசும் வித்தகனும் அல்லன். எனது பேச்சில் தவறும் இருக்கலாம்; சரியும் இருக்கலாம். கொள்ளக் கூடியதும் இருக்கலாம்; தள்ளக் கூடியதும் இருக்கலாம். அதனுல் நீங்கள் எப்படி அன்னப் பட்சியானது பாலையும் தண்ணீ ரையும் கலந்து வைத்தால்......''

(அன்னப்பட்சி உவமையும் நீங்கள் அடிக்கடி கேட்டுப் புளித்த சங்கதி என்பதால் அதனையும் விடுவோம்)

''இப்பொழுது உங்கள்முன் 'குறளின்பம்' பற்றிச் சிறப்புரை நிகழ்த்துமாறு அடியேன் பணிக்கப்பட்டிருக்கி றேன். குறளை அறியாதார் - அதன் பெருமையை உணரா தார் இந்தக் குவலயத்திலேயே இல்லை எனலாம்......''

(இந்த நேரத்தில் புலவருக்கு மாலை போடப்படுகி றது. அதிகமாக எல்லாரும் செய்வதுபோல் அவர் மாலை யைக் கழற்றி வைக்காமல், அதற்குரிய காரணத்தை விளக்கிப் பேசுகிருர்.)

''அதிகமாக மேடையில் பேசும் அறிஞர்கள் எல்லாரும் தமக்கு மாலை போடப்பட்டதும், அதனை உடனேயே கழற்றி மேசையில் வைத்துவிடுகிருர்கள். இது பெறுமதி

வாய்ந்த மாலைக்குக் கொடுக்கும் மரியாதையாகாது. இச் செய்கையானது மாலைக்கு மட்டுமன்றி பொதுவாக விழாக் குழுவினரையும் சிறப்பாக மாலைபோட வந்தவரையும் அவமதிப்பதாக முடிகிறது. மாலையைப் போட்டதும் அதனை உடனேயே கழுத்திலிருந்து கழற்றி வைப்பதற்கும் மாலை போட்டவரின் முகத்தில் அடிப்பதற்கும் இடையில் என்னுல் எதுவித வேறுபாடும் காணமுடியவில்லை. எனவே எல்லாவற்றிற்கும் முதலில் இந்த வழக்கத்தை நாம் ஒழித்துக்கட்டப் பழகிக் கொள்ளவேண்டும்......''

(எதற்காக அவர் மாலைபற்றி அப்படி விளக்கம் கூறுகிருர் என்பதற்கு இன்னெரு காரணமும் உண்டு. அது தன்னைப் படப் பிடிப்பாளர் படம் எடுக்கும் வரையிலாவது தான் 'மாலையும் கழுத்து'மாக இருக்கவேண்டும் என்பதாகும்!)

''இனிக் குறிப்பிட்ட பொருளுக்கு வருகிறேன். பைபிளுக்கு அடுத்த படியாக அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பெற்ற ஒரே நூல் திருக்குறளே! அப்படி இருக்கும் போது குறளின்பம் குறிந்து உங்கள்முன் பேசுவது 'கொல்லன் தெருவில் குண்டூசி விற்பது' போன்றதாகும். அதாவது இதனை ஆங்கிலத்தில் சொல்வதாக இருந்தால் 'கரீயிங் கோல் ரூ நியூ காசில்...''

(அவருக்கு ஆங்கிலமும் தெரியும் என்பதைச் சபையினர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இதனைச் சிரமப்பட்டு அவர் மனப்பாடம் செய்து வைத்திருந்தார்.)

''குறளின்பத்தை நீங்கள் இன்னும் இன்னும் அதிகமாக நுகர விரும்பினுல் அந்த ஆவலைத் தீர்ப்பதற்காகவே குறள் பற்றிய நூற்றுக் கணக்கான நூல்கள் வந்திருக்கின்றன. அவைகளை நீங்கள் விலை கொடுத்து வாங்கிப் படியுங்கள். 'விலை கொடுத்து' என்று அதனை நான் அழுத்திச் சொல்லுவதற்கும் காரணம் உண்டு. குறிப்பிட்ட

பொருளை விட்டுவிட்டு மீண்டும் விலகிச் செல்வதற்காக அன்பர்கள் தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும். திருமுருக கிருவானந்த வாரியார் மீது எனக்குள்ள அளவுக் கதிகமான பற்றும் பாசமுமோ என்னவோ இப்படி ஒரு பழக்கம் எனக்கும் ஏற்பட்டு விட்டது....''

(தனது அறிவு வரட்சியையும் கையாலாகாத் தனத்தையும் மறைக்க பாவம் கிருவானந்த்வாரியாரைத் துணைக்கு அழைக்கிறார்.)

''ஒரு சிகரெட் வாங்கி அதனை இரண்டு பேர்கள் புகைப்பதில்லை. ஒரு நுழைவுச் சீட்டைக் கொண்டு இரண்டு பேர்கள் சினிமாவோ நாடகமோ பார்க்க முடியாது. ஆனால் புத்தக விவகாரமோ வேறுவிதமாக இருக்கிறது. ஒரு புத்தகம் வாங்கி அதனை நூறு பேர்களும் படிக்கலாம்; அதற்கு மேலானவர்களும் படிக்கலாம். இப்படி ஒரு படு கேவலமான முறையும் வசதியும் இருப்பதால் தான் புத்தகம் போடுபவனால் உழைக்க முடிவதில்லை. எழுத்தாளர்கள் நித்திய தரித்திரர்களாக வாழவேண்டி இருக்கிறது. 'புத்தகத்தை விலை கொடுத்துத்தான் வாங்குவது; இரவல் கொடுப்பதில்லை' என்ற ஒரு நல்ல பழக்கம் நம்மவர்களுக்கு எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுதுதான் எழுத்தாளர்களுக்கு நல்ல காலம் வரும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்....''

(விரைவில் புலவரின் நூல் ஒன்று வெளி வரவிருப்பதாக அறியக் கிடக்கிறது.)

''எனக்குக் கொடுக்கப்பட்ட நேரமும் கடந்து விட்டது. உங்களின் மலர்ந்த செந்தாமரை போன்ற முகங்களை எல்லாம் பார்க்கும்போது மணிக்கணக்கில் அல்ல நாட்கணக்கிலும் பேசிக்கொண்டே இருக்கலாம் போல் தோன்றுகிறது...''

(கண்ணுடி அணிந்திருந்த போதிலும் அவரது 'கண் பார்வைக் குறைவு' நீங்கவில்லைப் போலும்! இல்லாவிட்டால் தனது பேச்சால் சலித்துப்போய் வாடித் தூங்கும் முகங்களை எல்லாம் செந்தாமரை மலரோடு ஒப்பிடுவாரா?)

"ஆனுல் கடமை கழுத்தைப் பிடித்து அழுத்துகிறது. ஆமாம் எனக்கு இன்னொரு கூட்டமும் இருக்கிறது. இறுதியாக உங்கள்முன் பேசுகின்ற இப்பெருவாய்ப்பினைத் தந்துள்ள மன்றத்தினருக்கு எனது மனப்பூர்வமான – இதயந் திறந்த வாழ்த்தையும் வணக்கத்தையும் தெரிவிக்கிறேன். அதன் தன்னிகரில்லாத் தொண்டுகளுக்கும், ஏனைய மன்றங்களுக்கெல்லாம் முன் மாதிரியாகத் திகழும் அதன் ஆற்றல்களுக்கும் நான் தலை வணங்குகின்றேன்..."

(இப்படியெல்லாம் மன்றத்திற்கு 'ஐஸ்' வைத்தால் தான் அடுத்த முறையும் தன்னை அங்கு பேச அழைப்பார்கள் என்ற நப்பாசை அவருக்கு!)

# கதைவாணன் கதை எழுதுகிறுன்

'ரூனகு' என அழைக்கப்படும் திருவாளர் அ. கனக சபை என்பவருக்கு திடீரென்று இருந்தாற்போல் ஓர் எண்ணம் தோன்றியது. தானும் ஏன் கதைகள் எழுதக் கூடாது? என்பதுதான் அந்த எண்ணமாகும்.

ஏராளமான கதைகளைப் படித்த தன்ஞல், நூற்றுக் கணக்கான சினிமாப் படங்களைப் பார்த்த தன்ஞல், எத்தனையோ வாழ்க்கை அனுபவங்களைக் கண்டும் கேட்டும் அறிந்த தன்ஞல் 'ஏன் கதைகள் எழுத முடியாது?' என அவன் சிந்திக்கலாஞன்.

'நேற்று முளைத்த கன்றுக் குட்டிகள் எல்லாரும் கதைகள் எழுதிப் பெயரும் புகழும் பெறும்போது, தமிழ்ப் பாடங்களில் விசேட திறமையுடன் எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்தியடைந்த தான் கதை எழுதப் புறப் பட்டதில் என்ன தவறிருக்கிறது?' என அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

கதைகள் எழுதி அதன் வருவாயைக் கொண்டுதான் காலத்தை ஓட்ட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அவனுக்குக் கிடையாது. 'நான் அனுப்பும் கதைகளை பத்திரி

கைகள் விளம்பரமாக மதிப்பிட்டு அதற்காக பில் அனுப்பாமல் ஏற்றுப் பிரசுரிக்க வேண்டும். சன்மானத்தைக் கூட எதிர்பார்க்க மாட்டேன்' - இவ்வாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொண்டு கனகு கதை எழுதுவதற்காக தன்னைத் தயார் படுத்தலானான்.

கதை எழுதுவதற்கு முன், கதை எழுதுவதற்கான முதலாவது தகுதியெனக் கருதிக்கொண்டு அடுத்த கணமே கனகு தனக்கு ஒரு புனை பெயர் வைத்துக் கொண்டான். 'கதைவாணன்' என்பதே எதிர்கால எழுத்துலக மேதையான 'கனகு' என்னும் திருவாளர் அ. கனகசபையின் புனைப் பெயரராகும்.

இப்பொழுது கதைவாணன் கதை எழுத அடுத்துத் தேவைப்படும் தங்கு தடையின்றி எழுதக் கூடிய பேனா புல்ஸ்காப் பேப்பர்கள், லோங் என்வலப்புக்கள், முத்திரைகள், வசதியாக இருந்து எழுதுவதற்கேற்ற மேசை நாற்காலிகள் முதலியவற்றையும் தேடிக்கொண்டு இதோ கதை எழுத ஆரம்பித்து விட்டான்—

''கிழக்கு வானத்தில் இருந்து சூரியன் கிளம்பித் தனது யாத்திரையைத் தொடங்கி விட்டான். இரத்தினவேல் இன்னும் எழும்ப மனமின்றிப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான்...''

மேற்படி முதல் பந்தியை எழுதிய கதைவாணன், பந்தியின் கருத்தில் மீண்டும் ஆழமாக கவனம் செலுத்திப் பார்த்தான். 'சூரியன் தன்னைத்தானே தான் சுற்றும். பூமியோ தன்னைத்தானே சுற்றுவதுடன் சூரியனையும் சுற்றிவரும். இதுதான் புவியியலின் ஆரம்ப பாடம். அப்படி இருக்கும்போது உண்மைக்குப் புறம்பாக சூரியன் கிழக்கு வானத்தில் இருந்து கிளம்பி யாத்திரை செய்வதாக எழுதியது எவ்வளவு தப்பு! இதைப் புவியியல் பேராசிரியர்கள் கண்டால் என்மீது வீண் பழியன்றோ சுமத்துவார்கள்' இப்படியாக எண்ணியவர் எழுதிய பகுதிகளைக் கிறுக்கி விட்டு வேறு முறையில் கதையை ஆரம்பித்தார்.

''பொழுது விடிந்து இத்தனை நேரமாகியும் படுக்கையை விட்டெழ மனமின்றிக் கிடந்தார் இரத்தினவேல். அவரை அசைத்து எழுப்ப முயன்ற அவரின் வாழ்க்கைத் துணை வியார் 'என்ன இன்னுமா தூக்கம்? பொழுதின் அருமை தெரியாதவர் போல்- இழந்த காலத்தை மீண்டும் பெற முடியாது என்பதை மறந்தவர் போல் கவலையற்றுக் கிடக் கிறீர்களே! பாடசாலை சென்றுவிட்ட சிறுவர்கள், பால் தந்துவிட்டுப் போன வயோதிபன், இவர்களுக்கெல்லாம் இருக்கும் பொறுப்பு உணர்ச்சி கேவலம் உங்களிடம் மட் டும் கிடையாதா?' என்றாள்.''

இப்படிக் கதையை ஆரம்பித்தவன் அடுத்த விநாடி அதையும் வெட்டி விட்டான். அப்படியெல்லாம் ஒரு பெண் பாத்திரம் பேச முடியாது என்பதுதான் அதற் கான காரணம். சாதாரண ஒரு குடும்பப் பெண் இப்படி யான ஒரு நீண்டதும், அர்த்தமும் அழகும் நிறைந்தது மான அடுக்குத் தொடர் வசனத்தைப் பேசமாட்டாள்- பேசவும் முடியாது என்பது கனம் கதைவாணனின் கருத் தாகும். அப்படிப் பேசுவதாக எழுதி விட்டால் அது வாழ்க்கையில் இருந்தும் வேறுபட்ட - நடக்க முடியாத விவகாரமாக முடியும் எனவும் அவன் கருதினான்.

அடுத்து அவன் வேறு கதை ஒன்றை வேறு முறையில் எழுதுவது பற்றிச் சிந்திக்கலானான்.

''மனைவி அகால மரணம் அடைந்துவிட தந்தைக்குத் தந்தையாய், தாய்க்குத் தாயாக இருந்து, தனது ஒரே மகன் குமாரைக் கவலை என்பதே தெரியாமல் வளர்த்து விட்டவர் குமாரலிங்கம். வளர்த்த கடா மார்பில் பாய்வது போல குமார் இப்படித் தன்னை நட்டாற்றில் விடுவான் என்று குமாரலிங்கம் கனவிலும் நினைத்திருப்பாரா?''

சோகக் கதை ஒன்றை எழுத ஆரம்பித்தான். ஆனால் இதிலும் தவறும் அபத்தமும் இருப்பதாகத் தோன்றவே தான் எழுதிய கடதாசியையே கசக்கிக் குப்பையில் எறிந்து விட்டான்.

ஒரே ஒரு தகப்பன். ஒரே ஒரு மகன். இப்படி யாகப் பாத்திரங்களைப் படைத்தது, சிக்கலின்றிக் கதையை நகர்த்துவதற்காக, வேண்டும் என்றே படைத்ததுபோல் அவனுக்குத் தோன்றியது. கேவலம் கதையை உணர்ச் சிகரமாகச் சித்தரிப்பதற்காக மனைவியை இழந்த கண வனையும் சகோதரர்கள் அற்ற மகனையுமா படைத்துக் காட்ட வேண்டும்?

கதைவாணன் புதிதாக ஒரு கடதாசி எடுத்து, புதி தாக, சுடச் சுட ஓர் இலக்கியக் கதை புனையலானார்.

"பூந்தாது சொரியும் அந்தி மாலையினை உடைய சோழனின் அருள் மிகுந்த வெண்கொற்றக் குடை போன்று, அதுவும் இந்த அழகிய உலகிலே தண்ணொளி பரப்புகின்ற......"

இலக்கியக் கதையாவது தனக்குக் கை கொடுக்காதா என்று முயன்றவன் அதிலும் வெற்றிகரமாகப் பின் வாங்க வேண்டி வந்துவிட்டது.

மக்களுக்காக, மக்கள் இலக்கியம் படைக்கப் புறப் பட்ட தான் மக்களில் பலருக்குப் புரியாத மொழி நடையை, சொல் ஆட்சியை கையாளலாமா? 'பூந்தாது' என்பதும் 'வெண்கொற்றம்' என்பதும், 'தண்ணொளி' என்பதும் எல்லாருக்குமா புரியப் போகிறது?

இப்படியாக இரவு பதினொரு மணிவரை முயன்றும் கதைவாணனால் ஒரு கதையின் ஆரம்பப் பகுதியைக்கூட எழுத முடியாமல் போய் விட்டது. தூக்கம் கண்களைத் தழுவியதனாலும், அலுப்பினால் உடல் தளர்ந்து விட்டத னாலும் அவன் தனது கதை எழுதும் திட்டத்தினை அடுத்த நாள் இரவுக்கு ஒத்தி வைத்தான்.

# இதோ ஒரு பத்திரிகை!

ஈழத்திலே நல்ல தரமான தமிழ்ப் பத்திரிகைகள் மிக மிகக் குறைவே! இதனால்தான் ஈழத்து இலக்கிய வளர்ச்சியும் மிகவும் பின்தங்கி இருக்கிறது. இக்குறையைத் தீர்க்கும் பொருட்டு - ஈழத்து இலக்கியத்தை வாழவைக்க இதோ 'ஈழமுரசு' வெளியாகியிருக்கிறது.

இப்பத்திரிகை பதினொரு அங்குல நீளமும் எட்டரை அங்குல அகலமும் கொண்டது; எட்டுப் பக்கங்கள். விலை உள்நாடு இருபது சதம், வெளிநாடு(!) இருபத்தைந்து சதம். 'ஈழமுரசு' பற்றி இதோ மேலும் விரிவாக விளம்புகின்றேன்.

**முதலாம் பக்கம்**

மேல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் 'ஈழமுரசு' என்ற தலைப்பு எழுதப்பட்டிருக்கிறது. அத்துடன் ஆசிரியர் துணை ஆசிரியர் பெயர்கள், பத்திரிகையின் விலை, பத்திரிகையின் முகவரி, ஆங்கில தமிழ்த் திகதிகள், மலர் ஒன்று, இதழ் ஒன்று என்பனவும் காணப்படுகின்றன. அடிப்பகத்தில் 'அரசியல், கலை, இலக்கியத் திங்கள் ஏடு' என எழுதப்பட்டிருக்கிறது. இடைப்பக்கத்தில் ஒரு தமிழ் அமைச்சரின் ஆசிச் செய்தி அன்னாரது புகைப்படத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## இரண்டாம் பக்கம்

இரண்டாம் பக்கம் முழுவதிலும் பத்திரிகை தோன்றப் போகிறது என்பதை அறிந்ததும் பத்திரிகை ஆசிரியருக்கு மக்களிடமிருந்து வந்த ஏராளமான கடிதங்களிலிருந்து இடநெருக்கடியை உத்தேசித்துச் சிலவற்றை மட்டும் தந்துள்ளார்கள்.

## மூன்றும் பக்கம்

ஒரு விளம்பரம் கால் பக்கத்தை விழுங்கி விடுகிறது. மற்றைய முக்கால் பக்கத்திலும் (ஒரு சிறு இடம் நீங்கலாக) ஒவ்வொரு ஊர்களிலும் நியமிக்கப்பெற்ற விற்பனையாளர்களின் முகவரிகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இடையே (நீங்கலாகவுள்ள அந்த இடத்தில்) கட்டமிடப்பட்ட ஓர் அறிவித்தல் காணப்படுகிறது. அதில் 'பத்திரிகையில் வெளியாகியுள்ள (?) கதை, கட்டுரை, கவிதைகளிலுள்ள பெயர்கள் யாவும் கற்பனையே' எனச்சொல்லப்பட்டிருக்கிறது.

## நான்காம் பக்கம்

அரைப் பக்கத்தில் இரண்டு விளம்பரங்கள் இடம் பெற்றுள்ளன. மிகுதி அரைப்பக்கத்தில் ஆசிரியர் தலையங்கமாக பத்திரிகையின் தோற்றத்துக்கான காரணமும் அதன் வருங்கால இலட்சியங்களும் கூறப்பட்டுள்ளன.

## ஐந்தாம் பக்கம்

ஐந்தாம் பக்கத்திலும் இரண்டு விளம்பரங்கள் அரைப் பக்கத்தை அலங்கரித்துள்ளன. ஏனைய அரைப்பக்கத்தில் 'ஈழமரசு' சந்தா விவரம், அடுத்த இதழில் இடம்பெறவிருக்கும் புதிய அம்சங்கள், அவைகளை எழுதுபவர்களின் விவரங்கள், கதை கட்டுரை கவிதைகளை அனுப்புபவர்கள் அவைகளை அனுப்பவேண்டிய முறைகள் என்பன யாவும் தரப்பட்டிருக்கிறது.

## ஆறும் பக்கம்

ஆறும் பக்கத்தில் ஒரு விளம்பரம் கால்பக்க அளவில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. மிகுதிப் பக்கத்தில் அடுத்த இதழில் 'கேள்வி - பதில்' பகுதி ஆரம்பமாகுமென்ற விரைத்துடன் கேள்வி கேட்பவர்கள் அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டுவதற்கான கூப்பனும் இடம்பெற்றிருக்கிறது. இதே போன்றதொரு கூப்பன் 'சிறுவர் பகுதி'க்கு அங்கத்தவர்களாகச் சேர்பவர்களுக்காகவும் தரப்பட்டிருக்கிறது.

## ஏழாம் பக்கம்

மூன்று விளம்பரங்கள் ஏழாம் பக்கத்தின் முக்கால் பகுதியை மூடிவிடுகின்றன. கால் பக்கத்தில் பத்திரிகை தொடங்கப் போகிறது என்பதை அறிந்ததும் ஆர்வ மேலீட்டால் பத்திரிகை வளர நிதிஉதவ செய்தவர்களின் பட்டியல் ஒன்று தரப்பட்டிருக்கிறது. இதுபோல் மேலும் பலரது உதவியையும் தாம் எதிர்பார்ப்பதாக ஆசிரியர் அடிக்குறிப்பும் எழுதியிருக்கிறார்.

## எட்டாம் பக்கம்

எட்டாம் பக்கத்திலும் இரண்டு விளப்பரங்கள் போட்டிருக்கிறார்கள். மேல் டக்கத்தில் (கோட்டுக்கு மேல்) தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்ட அதிசயமும், அடிப்பக்கத்தில் (கோட்டுக்குக் கிழ்) 'ஈழமுரசு' எந்த முகவரியிலிருந்து எப்போது யாரால் வெளியிடப்பட்டது என்ற விவரமும், ஆசிரியரது பெயரும் காணப்படுகின்றன. மிகுதி இடைவெளியில் பாரதியாரது கவிதை ஒன்று மறுபிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

சரி! எப்படியும் 'ஈழமுரசு' பிரதி ஒன்று வாங்கவேண்டும் எனத் தீர்மானித்து விட்டீர்களா? ஆனால் ஒன்று, நீங்கள் வாங்கினாலும் சரி வாங்காவிட்டாலும் சரி பத்திரிகையின் முதல் இதழைப் பொறுத்தவரை அதற்கு இலாபமே! ஏன் என்றால் பத்திரிகை வெளியிட ஏற்பட்ட

செலவைவிட விளம்பரங்களாலும் நன்கொடைகளாலும் அவர்கள் பெற்ற பணம் மிகவும் அதிகம்! ஈழமுரசுக்குச் சந்தா அனுப்ப எண்ணிவிட்டவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை இப்பொழுதே இக்கணமே செலுத்திவிடுகிறேன்.

---

# தொலைபேசி ஒரு தொல்லை

நேற்றைய தினம் ஒரு தெருவில் எதிர்பாராத விதமாக இரண்டு வாலிபர்கள் சந்தித்துப் பேசிக்கொண்டதை நானும் மூன்றுவது ஆளாக நின்று கவனிக்கமுடிந்தது.

முதலாமவன் இரண்டாமவனைப் பார்த்துக் கேட்டான்: ''நேற்று நீ எங்கு போயிருந்தாய்? டெலிபோன் பண்ணினேன். உன் வீட்டிலே ஒருவருமே பதிலளிக்கவில்லை.''

இரண்டாமவன் கேட்டான்: ''நேற்று என்றால் எத்தனை மணிக்கு?''

முதலாமவன்: ''பிற்பகல் சுமார் மூன்று மணிபோல் இருக்கலாம்''

இரண்டாமவன்: ''அப்படியா? டெலிபோன் வந்திருக்கும். ஆனால் எங்கள் வீட்டுக் கூடத்தில் அந்த நேரத்தில் றேடியோ உரத்துப் பாடிக்கொண்டிருந்திருக்கும். அந்தச் சத்தத்தில் டெலிபோன் மணி அடித்திருந்தாலும் அது எங்களுக்குக் கேட்டிருக்காது.''

முதலாமவன்: ''அதுதானே பார்த்தேன். றேடியோச் சத்தந்தான் டெலிபோனில் கேட்டது.''

வானொலிச் சத்தம் தொலைபேசியில் கேட்டதாக முதலாமவன் சொன்னதை இரண்டாமவன் நம்பினானோ என்னவோ தெரியவில்லை. ஆனால் அப்படிச் சொன்னது எவ்வளவு பொய் - தவறு என்பதை தொலைபேசிப் பாவனையாளர்களும், தொலைபேசி இயக்கங்கள் பற்றிய அறிவுள்ளவர்களும் புரிந்து கொண்டிருப்பார்கள், தொலைபேசி றிசீவரை இரண்டு பகுதியினரும் எடுத்தால்தான், இரண்டுபகுதியில் எந்தப் பகுதியில் பேசும் பேச்சோ அல்லது வேறு ஒலியோ மறுபகுதிக்குக் கேட்க முடியும். மற்றும்படி தொலைபேசி மணி அடித்துக்கொண்டே இருக்கும்போது இதெல்லாம் சாத்தியமில்லை.

அதெல்லாம் ஒருபுறம் இருக்க, மேலேகண்ட உரையாடலில் உள்ளதுபோல் முதலாமவனின் வாதப்படி - அதாவது மறுபகுதியில் தொலைபேசி மணி அடித்துக்கொண்டே இருக்கும்போது அங்குநடப்பது இந்தப்பகுதியில் கேட்கும் என வைத்துக் கொண்டால் அது எவ்வளவு சுவையாக இருக்கும் என்பதை சிறிது கற்பனைச் செய்து பார்ப்போமா?

## சுவை – 1

தணிகாசலம் என்பவர் தனது நண்பர் சுப்பிரமணியம் என்பவரை ஒரு முக்கிய அலுவல் காரணமாக நேரில் காணவேண்டி இருக்கிறது. சுப்பிரமணியம் வீட்டுக்குப் போகுமுன் அவர் வீட்டில்தான் இருக்கிறாரா என்பதை அறியும் நோக்கமாக தணிகாசலம் அவருக்கு டெலிபோன் செய்கிறார்.

சுப்பிரமணியம் வீட்டில் தொலைபேசி மணி அடித்துக் கொண்டிருப்பதும் அதேநேரத்தில் அங்குள்ளவர்கள் பேசிக் கொள்வதும் தனிகாசலத்துக்குப் பின்வருமாறு தெளிவாகக் கேட்கிறது:-

"அப்பா டெலிபோன்"

''எடுத்து என்னவென்று கேள். அவன் தணிகாசலம் பேசினுல் 'அப்பா இங்கை இல்லை' என்று சொல்லு. அவன் விசரன் வந்தால் ஒரு வேலையும் பார்க்கவிடாமல் 'வளவளா' என்று அலட்டிக் கொண்டிருப்பான்.''

தணிகாசலத்துக்கு எப்படி இருக்கும்? சுப்பிரமணியத்தின் மகன் தொலைபேசி றிசீவரை எடுத்ததும் எரிமலையாகக் குமுறினுர். பழிக்குப் பழி சுப்பிரமணியத்தின் வண்டவாளங்களை எல்லாம் அக்குவேறு ஆணிவேருகப் புட்டுக் காட்டினுர் என்பதை வேறு சொல்லவா வேண்டும்?

## சுவை – 2

'பத்மா நகை மாளிகை' உரிமையாளர் பத்மநாதன் அவர்கள் தனது வீட்டில் இருந்தவாறே தனது நகைமாளிகைக்கு டெலிபோன் செய்கிறுர். நகைமாளிகைத் தொலைபேசி நீண்டநேரம் அடித்துக் கொண்டிருக்கிறது. பின்னர் மனேச்சர் மயில்வாகனத்தின் குரலும் கூடவே கேட்கிறது.

''சீச்சி... இந்த தொலைபேசியே ஒரு பெரிய தொல்லையாகப் போச்சுது. சமய சந்தர்ப்பமே தெரியாமல் அலறிக் கொண்டிருக்கிறதே! ஆறுதலாக ஒரு பத்திரிகையோ புத்தகமோ படிக்க முடிகிறதா? எனக்கு வருகிற ஆத்திரத்துக்கு இதை அறுத்து எறிய வேண்டும் போலிருகிறது. ம்... அலோ... பத்மா நகைமாளிகை மனேச்சர் பேசுகிறேன்...''

பத்மநாதன் பேசினுர் ''நீர் மனேச்சர் வேலை பார்த்தது போதும். உம்முடைய கடமை உணர்ச்சியையும் பொறுப்புணர்ச்சியையும் போதியளவு புரிந்து கொண்டேன். கணக்கப்பிள்ளையிடம் சொல்லி உம்முடைய கணக்கைப் பார்த்து வையும். நான் சிறிது நேரத்தில் அங்கு வந்து விடுகிறேன்.''

பத்மநாதன், நகைமாளிகை சென்று மனேச்சர் மயில்வாகனத்துக்கு வேலைநீக்க அறிவித்தல் கொடுப்பது ஒருபுறம் இருக்கட்டும். நாம் அடுத்த சுவைக்கு வருவோம்.

## சுவை - 3

சுந்தரமூர்த்தி கடனாகக் கேட்டிருந்த ஆயிரம் ரூபாவை நாளை தருவதாகத் தகவல் தெரிவிப்பதற்காக புண்ணிய மூர்த்தி அவருக்கு டெலிபோன் செய்கிறார். சுந்தரமூர்த்தியும் அவன் மனைவியும் பேசிக்கொண்டிருப்பது புண்ணியமூர்த் தியின் காதுகளுக்குக் கேட்கிறது.

''புண்ணியமூர்த்தி அநேகமாக நீங்கள்கேட்ட பணத் தைத் தருவார் என்கிறீர்களே! அந்தப் பணத்தை எப்படித் திருப்பிக் கொடுப்பீர்கள். அதற்கு ஏதாவது வழி இருக் கிறதா?''

''திருப்பிக் கொடுப்பதா? அவன் ஒரு பச்சைப் பேயன் நாளைக்கு நாளையின்று என நாட்களைக் கடத்திக் கொண்டு போகவேண்டியதுதான். அவனும் இவனிடம் அலைவதைவிட ஆயிரம் ரூபா போனால் போகிறது என்று பேசாமல் இருந்து விடுவான்.''

''அவர் ஏதாவது சட்ட நடவடிக்கை எடுத்தால்..?''

''ஐயாயிரம் பத்தாயிரம் என்று வாங்கியவர்கள் எல் லாரும் கைவிரித்துவிட்ட பின்பும் பேசாமல் இருப்பவன் என்னுடைய ஆயிரம் ரூபாவுக்கா சட்ட நடவடிக்கை எடுக்கப்போகிறான்?''

''அது சரி டெலிபோன் மணி அடித்துக் கொண்டி ருக்கிறதே! எடுத்து என்னவென்றுதான் கேளுங்களேன்!''

''அலோ... சுந்தரமூர்த்தி பேசுகிறேன்...''

பல்லைக் கடித்துக்கொண்டு பொறுமையாக இவைகளை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த புண்ணியமூர்த்தி 'பச் சைப் பேயன்' என்பதாலோ என்னவோ சுருக்கமாகவே பேசுகிறார்.

"நான் புண்ணியமூர்த்தி பேசுகிறேன். நீங்கள் கேட்ட பணம் தரமுடியாது." அடுத்து அவர் 'டக்' என்று றிசீவரை வைத்துவிடுகிருர்.

இம்மட்டல்ல இன்னும் எத்தனையோ இடங்களில் எத்தனையோ சுவையான சம்பவங்கள் நடைபெறும். மேலே குறிப்பிட்ட தொலைபேசி அழைப்புகள் 'டிரங்கோலாக' இருந்தால் இந்த வேடிக்கைகளையெல்லாம் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தினரும் அனுபவிக்கலாம்!

---

# கல்வி அமைச்சரின் கவனத்துக்கு

நான் கல்லூரியில் மாணவனுக இருந்தபோது தேர்வு சமயங்களிலெல்லாம் எனக்கு ஒரு யோசனை தோன்றுவது வழக்கம். அந்த யோசனையைக் கனம் கல்வி அமைச்சர் சட்டமாக்கிச் செயல்படுத்தினுல் என் போன்றவர்கள் நன்மையடையலாமே என எண்ணுவேன்.

ஆனுல் அந்த எண்ணம் கடைசிவரை ஈடேறவேயில்லை. இப்பொழுது நான் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து வெகு காலமாகிவிட்டது. இருந்தபோதிலும் முன்பெல்லாம் எனக்குத் தோன்றிய அந்த யோசனையை இப்பொழுதாவது - இன்றைய கல்வி அமைச்சராவது சட்டமாக்கிச் செயல்படுத்தினுல் என்ன?

முன்பு நான் படிக்கும் காலத்தில் தேர்வில் சித்தியடைய வேண்டுமானுல் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருக்க வேண்டும் என்றிருக்கும். எனக்கோ ஐந்து பாடங்கள்தான் இருக்கும். அந்த ஒரு பாடம் இல்லாத காரணத்தாலேயே நான் சில சமயம் பரீட்சையில் குண்டுபோட வேண்டி

வருவதுண்டு. ஆனல் அதே நேரத்தில் எனது நண்பர்கள் சிலர் அனுவசியமாக தேவைக்கு அதிகமாக ஏழு எட்டுப் பாடங்களில் சித்தி அடைந்திருப்பார்கள்.

அந்தச் சமயத்தில் எல்லாம் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட அந்த யோசனை எனக்குத் தோன்றும். அதைக் கனம் கல்வி அமைச்சர் சட்டமாக்கிச் செயல்படுத்தினல் என்ன என்று எண்ணுவேன்.

இன்னும் சில சந்தர்ப்பங்களில் பரீட்சைக்குத் தேறுவதற்கான ஆறு பாடங்களுக்கு ஒரு பாடத்தில் மட்டும் சில புள்ளிகள் பெற்றிருக்க வேண்டும் என்ற நிலை இருக்கும். அதாவது முப்பத்தி ஐந்து புள்ளிகள் இருக்க வேண்டிய ஒரு பாடத்தில் முப்பது புள்ளிகள்தான் இருக்கும். அந்தக் காரணத்தினல்கூட நான் ஒருமுறை அதே வகுப்பில் மீண்டும் காலம் கழிக்க வேண்டிய பரிதாபநிலை ஏற்பட்டது. அதே நேரத்தில் எனது வகுப்புச் சக மாணவர்கள் சிலரிடம் அளவுக்கதிகமாக எக்கச்சக்கமாக அந்தப் பாடங்களில் புள்ளிகள் இருக்கும்.

அப்பொழுதுகூட நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட அந்த யோசனை எனது மனத்தில் தட்டுப்படும்.

'மாணவர்கள் தாம் விரும்பினல் தேர்வின்போது ஒருவருக்கொருவர் பாடங்களையோ புள்ளிகளையோ தானம் செய்யலாம் அல்லது கடனகக் கொடுக்கலாம்' என்பதுவே அந்த யோசனையாகும்.

மேற்படி எனது யோசனையை அப்போதைய கல்வி அமைச்சர் சட்டமாக்கிச் செயல்படுத்தியிருந்தால் என் போன்றவர்கள் வீணக இரண்டு மூன்று ஆண்டுகளைக் கூடுதலாகக் கல்லூரிகளில் தியாகம் செய்திருக்கவேண்டி வந்திராது. இரண்டு மூன்று ஆண்டுகள் முன்னதாகவே எஸ். எஸ். சி. கொம்பிளீற் பண்ணியிருக்கலாம்.

எமது கெட்ட காலம், அப்போதைய கல்வி அமைச்சருக்கு இந்த யோசனை தோன்றவில்லை. இனிமேலாவது இதைச் சட்டமாக்கிச் செயல்படுத்தினுல் வருங்கால மாணவ சமுதாயமாவது நன்மை அடையலாம் என்பதை மிக அழுத்தந் திருத்தமாக கூற விரும்புகிறேன்.

## கடன் தானம்!

ஆறு பாடங்களில் சித்தியடைய வேண்டிய இடத்தில் ஒரு மாணவன் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருக்கிறுன். அவனது நண்பனுே ஏழு பாடங்களில் சித்தியடைந்திருக்கிறுன். அப்பொழுது ஐந்து பாட மாணவன் ஏழு பாட மாணவனிடம் ஒரு பாடத்தை கடனுகவோ தானமாகவோ தரும்படி கேட்கலாம். ஏழு பாட மாணவனும் அதற்கு விரும்பினுல் சம்மதிக்கலாம். இப்பொழுது இரண்டு மாணவர்களுமே ஆறு பாடங்கள் சித்தியடைந்ததாகக் கருதப் படுவார்கள். ஒரு பாடம் இல்லாத காரணத்தினுல் ஐந்து பாடங்கள் வைத்திருக்கும் மாணவர்கள் தேர்வில் குண்டு போடுவது தவிர்க்கப்படும்.

இன்னும் ஒரு மாணவன் கணித பாடத்தில் இன்னும் ஒரு பத்துப் புள்ளிகள் பெற்றுல்தான் ஆறு பாடங்கள் சித்தியடைந்ததாக முடியும் என வைத்துக்கொள்வோம். அதே சமயத்தில், அவனது நண்பனிடம் அந்தப் பாடத்தில் எழுபது புள்ளிகள் இருப்பதாகக் கொள்வோம். அவன் மட்டும் ஒரு பத்தோ பதினைந்து புள்ளிகளை முன் சொன்ன மாணவனுக்குத் தானம் செய்தால் என்னவாம்? தானம் செய்தவனுக்குக் கணிதத்தில் ஒரு பத்தோ பதினைந்து புள்ளிகள் குறைந்தாலும் இன்னெருவனைத் தூக்கிவிட்ட புண்ணியமும் உண்டாகுமல்லவா?

## வேலையில்லாத் திண்டாட்டம்

எனது யோசனை என்னவோ நன்றுக இருந்தாலும் அது சட்டமாகிச் செயல்படுத்தப் பட்டால் படித்தவர்கள்

தொகை அதிகரித்துவிடும். அரசாங்கம் சமாளிக்கமுடியாத அளவிற்கு வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகிவிடும் என்று சிலர் கண்டிக்கலாம்.

ஆனல் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். படித்தவர்கள் பெருகிவிட்டால் அவர்களுக்கெல்லாம் அரசாங்கம் வேலைகள் வழங்கித்தான் ஆகவேண்டும் என்பதில்லை. இதுவரை அப்படி நடந்ததும் இல்லை. அரசாங்க வேலைகளுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்குக் கூட வேலை வழங்கப்படும் என்ற உத்தரவாதம் அளிக்கப் படாதபோது எஸ். எஸ். ஸி. காரர்களுக்கெல்லாம் வேலைகள் கொடுக்கவேண்டும் என்பது எப்படி நியாயமாகும்?

தவிர, நான் குறிப்பிட்ட யோசனை செயல்படுத்தப் பட்டால் எஸ். எஸ். ஸி. காரர்கள் அதிகரித்துவிடுவார்கள் என்பது உண்மைதான் என்றாலும் அது நூற்றுக்கு நூறு அதிகரிக்கும் என்பதுவும் தவறு. மேலும் மேலும் பணம் சேர்க்க வேண்டும் என்ற பேராசைக்காரர்களும், ஒருசதம் கூட வீணக்கக் கூடாது என்ற கஞ்சத்தனம் கொண்டவர்களுமாக எம்மத்தியில் பல மனிதர்கள் இருக்கிறார்கள் அல்லவா? அப்படிப் பாடங்கள் புள்ளிகள் போன்றவைகளில் பேராசை கஞ்சத்தனம் காட்டக்கூடியவர்கள் மாணவர்கள் மத்தியிலும் இருப்பார்கள் என்பதை மறுக்கமுடியாது. எனவே திறமைசாலி மாணவர்களிலும் நூற்றுக்குப் பத்தோ பதினைந்து பேர்கள்தான் இத்தகைய தானம் செய்யக்கூடிய பக்குவ நிலையில் இருப்பார்கள்.

நான்கூட இந்த யோசனையைச் சட்டமாக்கிச் செயல் படுத்தச் சொல்லுவது வேலைகளுக்காக அல்ல. இப்பொழுது நாம் எல்லாரும் சதாரண ஒரு மனிதனுக நடமாடுவதென்றாலும் அதற்குக் குறைந்த பட்சம் எஸ். எஸ். ஸி. என்ற தகுதியாவது வேண்டும் என்றாகிவிட்டது. இந்தக் குறைந்த பட்சத் தகுதியையாவது இன்றைய மாணவ குலத்துக்குக்

கொடுப்பதற்கு நாம் எதற்காகத் தயங்கவேண்டும்? அதற்காகவே இந்த யோசனை.

எனது இந்த யோசனையைச் சட்டமாக்கிச் செயல்படுத்துவது சம்பந்தமாக ஏன் கனம் கல்வி அமைச்சர் கவனம் எடுக்கக் கூடாது?

---

# இப்படி எத்தனை ஐந்து சதங்கள்

நான் அடிக்கடி பஸ்ஸில் யாழ்ப்பாணம் போய் வருபவன். யாழ்ப்பாணத்திலிருந்து எனது பஸ் தரிப்பு நிலையமான மானிப்பாய்க்கு உரிய பஸ் கட்டணம் இருபது சதம். ஆனால் எந்த நேரத்திலும் சில்லறையாக இருபது சதம் கிடைக்குமா என்ன? சில சமயங்களில் இருபத்தைந்து சத ஒற்றை நாணயத்துடன் பஸ் ஏறி, எனக்கு வரவேண்டிய மிகுதி ஐந்து சதத்தைக் கொண்டக்டரிடம் கோட்டை விட்டிருக்கிறேன். அத்தகைய சில சம்பவங்களை விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு நாள்-

யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய் ஊடாகச்செல்லும் பஸ் ஒன்றில் நான் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். யாழ்ப்பாணத்தில் இருபத்தைந்து சத நாணயம் ஒன்றைக் கொடுத்து டிக்கட் எடுத்தபோது 'சில்லறை ஐந்து சதம் இல்லை; பிறகு வாங்கிக் கொள்ளும்' என்று கொண்டக்டர் சொல்லியிருந்தார்.

பஸ் சிறிது தூரம் சென்றதும், ஐந்து சதங்கள் கொண்டக்டரிடம் சேர்ந்துவிட்டதை அறிந்துகொண்ட நான் மிகுதி ஐந்து சதம்பற்றி நினைவூட்டினேன்.

அதற்கு அவர் சொன்ன பதிலால் நான் வெட்கித் தலை குனியவேண்டி வந்துவிட்டது. 'உம்முடைய ஐந்துசதத்தைக் கொண்டு ஓடிவிடமாட்டேன்; பொறும் தரலாம். அதை கொண்டுபோய் நான் என்ன வீடா கட்டப் போகிறேன்' என்றவாறு ஏதோ அவசர அலுவல் பார்ப்பதுபோல் பஸ் ஸுக்குள்ளே அங்குமிங்குமாக ஓடித்திரிந்தார்.

பஸ் மானிப்பாயைச் சமீபித்துக்கொண்டிருந்தபோது கூட நான் அந்த ஐந்து சதம்பற்றிக் கேட்கவில்லை. கேட்டால் ஒருவேளை 'உம்முடைய ஐந்து சதத்தில் நான்வீடு கட்ட போவதில்லை; இந்தாரும் பிடியும்' என்று சொல்லிக்கொண்டு அவர் அக்காசை தந்தால்கூட அது எனக்கு மிகவும் அவமானமாகத்தானே இருக்கும்.

'நானுகத் கேட்பதில்லை. அவர் தரும்போது வாங்கிக் கொள்வோம்' என்ற முடிவுடன் இருந்த எனக்கு அன்று அந்த ஐந்து சதம் கிடைக்கவேயில்லை. பஸ் நின்று நான் இறங்கும்வரை கொண்டக்டர் என்னைக் கவனியாதவர் போல் இருந்துவிட்டார்.

இன்னொரு நாள்-

அன்றும் இருபத்தைந்து சதம் கொடுத்து மானிப் பாய்க்கு டிக்கட் எடுத்திருந்தேன். மீதி ஐந்து சதத்தைப் பின்பு தருவதாகக் கொண்டக்டர் கூறியிருந்தார்.

பிரயாணத்தின்போது இடையில் ஐந்து சதத்தைக் கேட்கக்கூடாதென்று தீர்மானித்திருந்தேன். அப்படிக் கேட்டால் கொண்டக்டர் 'உம்முடைய ஐந்து சதத்தை நான் கொண்டு ஓடிவிடமாட்டேன்' என்றோ, 'உம்முடைய ஐந்து சதத்தில் நான் வீடு கட்டப்போவதில்லை' என்றோ சொல்லலாம் அல்லவா? அப்படி அவர் சொன்னால் நான் பலர் மத்தியில் அவமானப்படவேண்டும் அல்லவா?

இருந்தாலும் 'ஐந்து சதத்தை இழக்கவும்கூடாது' என்று எண்ணிய நான் இன்னொரு முடிவுக்கும் வந்திருந்தேன்.

அதன்படி 'நானுகக் கேட்பதில்லே, அவர் தரும்போது வாங்கிக்கொள்வோம்' என்றில்லாமல் இறங்கும்போது கட்டாயம் கேட்டு வாங்கவேண்டும் என்றிருந்தேன்.

நான் இறங்கவேண்டிய இடமும் வந்தது. இறங்கும் போது மீதி ஐந்து சதம் தரவேண்டும் என்ற சங்கதியை கொண்டக்டருக்கு நினைவூட்டினேன். அவர் 'கடைசி நேர மான இப்பொழுதா கேட்கவேண்டும், என்ற பாவனையில் நாக்கினுல் 'இச்' கொட்டியவாறு தனது சட்டைப் பையில் கைவிட்டு சில்லறைகளைக் கோலி எடுத்து கையைச் சுள காக்கிப் புடைத்துப் புடைத்து அதற்குள் ஐந்து சதம் இருக்கிறதா எனத் தேடிக்கொண்டிருந்தார்...

இப்படியே நேரம் போய்க்கொண்டிருந்தால், அந்தப் பஸ்ஸில் ஏறுவதற்காக மிகிடலைகச்சுடன் பொய்த்துக் கொண்டிருந்த பிரயாணிகளின் சீற்றத்திற்குத்தான் ஆளாக வேண்டும். எனவே நானுகவே கொண்டக்டரிடம் 'பர வாயில்லே இருக்கட்டும்' என்று சொல்லிவிட்டு இறங்கி நடையைக் கட்டினேன்.

வேருெரு நாள்-

அது 'எக்ஸ்பிரஸ்' என்று சொல்லப்படும் ஒரு கடுகதி பஸ். இதில் பிரயாணிகள் ஏறுவதற்கான வாசல் பின் பகுதியிலும், இறங்குவதற்கான வாசல் முன் பகுதியிலும் இருக்கும். பிரயாணிகள் இதில் முறை தவறி நடந்தால் கொண்டக்டரின் பலத்த கண்டனத்துக்கு ஆளாகவேண்டும். இப்பிரச்சினையில் சில சமயங்களில் கொண்டக்டருடன் சேர்ந்து டிரைவரும் அத்துமீறிப் பிரவேசிப்பதுண்டு.

அத்தகைய ஒரு கடுகதி பஸ்ஸில் நான் அன்று பிர யாணம் செய்துகொண்டிருந்தேன். பிரயாண விரைங்களும் சில்லறைப் பிரச்சினைகளும் முன்போலவே! நான் இறங்கும் வரை பஸ்ஸில் எக்கச்சக்கமான கூட்டம்.

ஒருவழியாக இறங்கவேண்டிய இடமும் நெருங்கிக் கொண்டிருந்தது. கொண்டக்டரிடம் மிகுதி ஐந்து சதத்தைக் கேட்க முடியாமலிருந்தது. பஸ்ஸின் ஏறுவதற்கான பின்வாசலில் நிற்கும் அவரை சன நெரிசலில் பார்க்கவே முடியவில்லை. தவிர சனத்தை விலக்கிக்கொண்டு அவரண்டைபோய் ஐந்து சதத்தை வாங்கிக்கொண்டு அந்த வாசலாலேயே இறங்கலாமென்றால் அது முறை தவறி நடப்பதாக முடியும். அத்துடன் அப்படி நடந்தமைக்காக நான் கண்டிக்கப்படவும் கூடுமல்லவா?

அப்பொழுது எனக்குத் தோன்றிய ஒரேவழி, இறங்குவதற்கான முன்வாசலால் இறங்கி நிலத்தில் சிறிது நடந்து கொண்டக்டர் நிற்கும் பின் வாசலை அணுகி அவரிடம் ஐந்து சதத்தைக் கேட்கவேண்டும் என்பதேயாகும்.

அதன்படியே நான் மானிப்பாயில் இறங்கிக் கொண்டக்டரைஅணுகுவதற்கு முன் அந்தோ, அந்த கடுகதி புறப்பட்டுவிட்டது. கேவலம் ஐந்து சதத்துக்காக கையைத் தட்டியவாறு பஸ்ஸைத் துரத்திக்கொண்டு ஓடுவதா?

மற்றொரு நாள்-

ஆரம்பக் கதையெல்லாம் முன்போலவேதான். இடையில் கொண்டக்டரிடம் மிகுதி ஐந்து சதத்தைக் கேட்டபோது அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா?

''அதுதான் முன்பே தந்துவிட்டேனே!''

எப்படியிருக்கும் எனக்கு? முதன் முதலாக என்னைப் பொய்யனாகவும் ஏமாற்றுக்காரனாகவும் ஆக்கிய முதல் மனிதனே அந்தக் கொண்டக்டர்தான். எனக்கு அப்பொழுது ஏற்பட்ட அவமானத்தில் அந்த ஐந்து சதத்தை கேட்காமல் விட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்றுதான் தோன்றியது.

அந்தச் சந்தர்ப்பத்தில் நான் கொண்டக்டரிடம் எதைச் சொல்லி எனது கட்சியை நிலைநாட்டினுலும் பிரயாணிகள் மத்தியில் அதனுல் எனக்கு அவமானத்துக்குமேல் அவமானமே ஏற்படும்.

'இல்லை தரவில்லை' என்று சொல்லி வாதாடிக்கொண்டிருந்தால் 'கஞ்சப்பயல் போயும் போயும் ஐந்துசதத்திற்காகச் சண்டைபோட்டுக் கொண்டிருக்கிருன்' என்று பிரயாணிகள் என்னைப்பற்றி எண்ணுவர்.

வாதாடிக்கொண்டு இருப்பானேன் என்று 'சரி, தந்திருப்பீர்கள்; நான்தான் மறந்திருப்பேன்' என்று சொன்ஞலோ 'ஏமாற்றுக்காரன்' பட்டம் கிடைக்கும்.

இருதலைக்கொள்ளி எறும்பு நிலையில் கொண்டக்டர் தரவில்லையென்பதற்கு யாரைச் சாட்சிக்கு அழைக்கலாம் என்று ஒருபுறமும், 'போனுல் போகட்டும், ஆனுல் எப்படி அதைச் சொல்வது' என்று மறுபுறமுமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

கொண்டக்டர் தொடர்ந்து சொன்ஞர். ''ஒருவேளை சீற்றுக்குக் கீழே எங்கேயாவது விழுந்திருக்கும், வடிவாப் பாரும்.''

ஐந்து சதம் போனுலும் அப்பொழுது நான் இருந்த நிலையில் கொண்டக்டரின் அந்த வார்த்தை என் நெஞ்சில் பால்வார்த்ததுபோல் இருந்தது. அதுதான் சமயமென்று நானும் சமாளித்துக்கொண்டு சொன்னேன். ''ஐந்து சதம் தானே, பறவாயில்லை.''

'கேவலம் ஐந்து சதத்தை அதுவும் ஏமாளித்தனமாகப் பறிகொடுத்துவிட்டு அந்த வெட்கம் கெட்ட கதையை வேறு சொல்லிக்கொண்டிருக்கிருனே கஞ்சப்பயல்' என்கிறீர்களா?

ஆனால் உங்களுக்கு எங்கே தெரியப்போகிறது, இப்படி எத்தனை நாட்களில் எத்தனை ஐந்து சதங்களை இழந்திருக்கிறேன் என்ற சங்கதி.

'சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்' சிறுதுளி பெருவெள்ளம்' என்ற பழமொழிகளெல்லாம் நீங்களும் அறிந்ததுதானே!

---

# நாற்பது நிமிட நாடகம்!

[பாடசாலையின் முதல் மணி அடிக்கிறது. ஆசிரியர் ஆறுமுகம் ஒரு கையில் தோல் பெட்டியுடனும், மறுகையில் வெந்நீர் போத்தலுடனுமாக எட்டாம் வகுப்புக்குள் நுழைகிறார். வகுப்பில் மகேசன், இரத்தினம், சிவபாலன், மகேந்திரன், நடேசன், சந்திரன், மூர்த்தி, கண்ணன் முதலிய முப்பது மாணவர்கள் இருக்கிறார்கள்.]

மாணவர்கள்: குட்மோணிங் சேர்.

ஆசிரியர்: குட்மோர்ணிங்! எல்லாரும் இருக்கலாம் அதுசரி இந்தக் கரும்பலகையை நான் வருமுன்பே அழித்து வைத்திருக்கக் கூடாதா? டஸ்ரரில் இருந்து பறக்கும் தூசியானது எனக்கு ஒத்துக்கொள்ளாது. மகேசன் வந்து அதைக் கெதியாக அழித்துவிடலாம்.

[மகேசன் கரும்பலகையை அழிப்பதற்குப் போதல். ஆசிரியர் முகத்தைக் கைக்குட்டையால் மூடியவாறு வகுப்பை விட்டு வெளியேறுகிறார். ஐந்து நிமிடங்களின்பின் தூசி அடங்கியதும் மீண்டும் வகுப்புக்குள் நுழைகிறார்.]

இரத்தினம்: இனிமேல் சேர் நீங்கள் வரமுன்பே அழித்து வைக்கலாம்.

ஆசிரியர்: ம்...பிறகும் இதே கதைதானே ஏறு வாங்குக்கு மேலே. படிக்கிற நேரத்திலே குழப்பிக் கொண்டு......

சிவபாலன்: சேர் இரத்தினம் மறைக்கிறார். எங்களுக்குக் கரும்பலகை தெரியவில்லை.

மகேசன்: (மெல்லிய குரலில்) ஏண்டா உனக்குக் கரும்பலகை? அங்கை என்ன படமா காட்டப் போகினம்?

ஆசிரியர்: டேய் இரத்தினம்! பின் வாங்கிலே போய் ஏறி நில்! சிவபாலன் இங்கை வாரும்.

ஆசிரியர்: (தனது பெட்டியில் இருந்து ஒரு தம்ளரை எடுத்துக் கொடுத்து) இதுக்கை ஐயாத்துரை கடையில் துப்பரவாகக் கொஞ்சம் சுடுதண்ணீர் வாங்கிவாரும் பாப்பம்.

[சிவபாலன் போனதும் ஆசிரியர் தனது பெட்டியிலிருந்து ஒரு சிறு கண்ணாடியையும் சீப்பையும் எடுத்து கண்ணாடியைப் பார்த்துத் தனது மொட்டைத் தலையிலுள்ள இரண்டொரு மயிரையும் வாரி விடுகிறார். தங்களையும் மீறி வந்த சிரிப்பை மாணவர்கள் அடக்கிக் கொள்ளுகிறார்கள். மகேசனுக்கும் மகேந்திரனுக்கும் மட்டும் அது முடியாமல் போகிறது; உரத்துச் சிரித்துவிடுகிறார்கள்.]

ஆசிரியர்: அந்த இரண்டுபேரும் ஏறலர்ம் வாங்குக்கு மேலே! இது என்ன கூத்துக் கொட்டகை என்ன எண்ணமோ! நீங்கள்கூட படித்து முன்னேறுவதென்றால் அது எப்படி முடியும்?

[இருவரும் வாங்குக்குமேல் ஏறுகிறார்கள்]

மாணவர்கள்: பின் வாங்கு! பின் வாங்கு!

ஆசிரியர்: பின் வாங்கில் இருப்பவர்கள் எல்லாரும் முன் வாங்குகளுக்கு வாருங்கோ. நிற்கிறவர்களுக்கு அந்த வாங்கு தேவைப்படுகிறது.

[சிவபாலன் வெந்நீர் கொண்டு வருகிருன். ஆசிரியர் பெட்டியிலிருந்து ஏதோ மருந்துக் குளிகை எடுத்து வாய்க்குள் போட்டு உமிழ்கிருர். பின் வெந்நீரைக் குடிக்கிருர். இந்த நேரத்தில் நடேசனுக்கும் சந்திரனுக்கும் இடையில் ஏதோ தகராறு ஏற்பட்டு வாதம் முற்றுகிறது.]

ஆசிரியர்: நடேசன் சந்திரன் இருவரும் இங்கை வரலாம். அங்கை என்ன சண்டை?

நடேசன்: சேர், இந்தப் பேனையை இவர் தன்னுடையதாம். நான் களவெடுத்துப் போட்டேன் என்கிருர். என்னைக் கள்ளன் எனக் குற்றம் சாட்டுகிருர்.

சந்திரன்: இது என்னுடையதுதான் சேர். போன கிழமைதான் வாங்கினேன். அதற்கிடையில்...

நடேசன்: சேர்! இது அவருடையது என்று எழுதியா ஒட்டியிருக்கு? இப்படி வேறு ஒருவராலும் வாங்கமுடியாதா?

[இருவருக்கும் மீண்டும் சண்டை ஆரம்பமாகிறது. ஆசிரியர் பிரச்சினைக்குரிய அந்தப் பேனவை வாங்கித் தனது பெட்டிக்குள் போட்டு விடுகிருர்.]

ஆசிரியர்: நீங்கள் இரண்டு பேருமே பேனை வைத்திருக்கத் தகுதியற்றவர்கள். ஆதலால் அது என்னிடமே இருக்கட்டும். நீங்கள் இனியாவது தகராறு செய்யாமல் போய் இருங்கள்.

[நடேசன் சந்திரன் இருவரும் தோல்வியுடன் திரும்புகிருர்கள். ஆசிரியர் தனது வெந்நீர் போத்தலில் இருந்து பால் சாப்பிட ஆயத்தமாக அதன் மூடியைத் திறக்கிருர்.

இத்தனை நேரமும் வாங்கின்மேல் நின்றவர்களில் ஒருவரான இரத்தினம் வேண்டுமென்றே மயங்கி விழுவது போல் தடாலென கீழே விழுந்து விடுகிறுன். மாணவர்கள் எல்லோரும் அவனைச் சுற்றிக் கூடி விடுகிறுர்கள். ஆசிரியரும் கூட்டத்தோடு ஐக்கியமாகிவிடுகிறுர்.

ஆசிரியர்: ஏனெடா அவன் விழுந்தவன்?

மகேசன்: அவருக்கு இப்படி அடிக்கடி மயக்கம் வருவதுண்டு சேர் சோர்வுப் பிணியாம்!

ஆசிரியர்; தயவு செய்து கூட்டமாக நிற்காதீர்கள். அவனுக்குக் காற்றுப் படவேண்டும். ஒராள் பக்கத்திலிருந்து விசுக்கலாம். இன்னெராள் முகத்தில் சிறிது தண்ணீர் தெளித்து விடலாம்.

[சிறிது நேரத்தில் இரத்தினம் கண் திறத்தல்]

ஆசிரியா: சிவபாலா! ஆளுக்கு ஏதாவது பருகக் கொடுக்க வேண்டுமா?

சிவபாலன்; உங்கடை பிளாஸ்க்கில் இருந்து பால் எடுக்கவா சேர்?

ஆசிரியர்: சுத்தப் பைத்தியமாய் இருக்கிறுயே! மயங்கியவனுக்குப் பாலா கொடுப்பது? இந்தா காசு, கடையிலை சோடா வாங்கி வா! (சிவபாலன் சிறிது தூரம் சென்றதும்) வேண்டாம் சிவபாலா. சோடா வேண்டாம் ரீ வாங்கி வா.

சிவபாலன்; பால் ரீயா சேர்?

ஆசிரியர்: பாலே - ஆகாது கூடாதென்று எத்தனை தரம் சொல்லுவது?

சிவபாலன்: அப்படியாளுல் வெறும் கோப்பி...?

ஆசிரியர்: கோப்பியும் கூடாது. நீங்கள் முதலுதவிச் சிகிச்சை முறைகள் படித்ததில்லையா? பிளேன் ரீ போதும். மறந்திடாதை!

[சிவபாலன் போகிறுன். ஆசிரியர் தனது வெந்நீர்ப் போத்தலில் இருந்து பால் ஊற்றிக் குடிக்கிறுர். சிறிது நேரத்தில் சிவபாலன் தேநீர் கொண்டுவந்து இரத்தினத்துக்குக் குடிக்கக் கொடுக்கிறுன். இரத்தினம் சிரித்தவாறு எழும்புகிறுன்.]

ஆசிரியர்: வாங்கின் மேல் நின்றவர்கள் எல்லாரும் பழைய இடங்களில் பேரய் இருக்கலாம் இரத்தினம் கடைசி வாங்கில் ஆறுதலாகப் போய் படுத்துக்கொள். மற்றவர்கள் அவனைக் குழப்பக் கூடாது.

மூர்த்தி: சேர்! இன்றைக்குக் கணக்கில் நேரமும் தூரமும் செய்யவேண்டும்.

[இந்த நேரத்தில் பல பாணவர்கள் மூர்த்தியை நோக்கி 'மடையா' என்றும் 'இரடா' என்றும் குரல் எழுப்புகிறுர்கள்.]

ஆசிரியர்: மூர்த்தியா எனக்கு வாத்தியார்? நீயா எனக்குப்படிப்பிக்கிறுய்? இங்கே நீ 'நேரத்தை' வீணுக்காமல் 'தூரப்'போய் அந்தச் சுவரோரடை நில்.

கண்ணன்: சேர் சுந்தரலிங்கம் அறிக்கை விட்டிருக்கிறுர். அது பேப்பரிலே வந்திருக்குது.

ஆசிரியர்: என்ன வவுனியா சுந்தரலிங்கம்தானே! அவரை எனக்கு நன்ருகத் தெரியுமே! நாங்கள் இருவரும் நல்ல சிநேகிதர்கள். இரண்டு வருடங்கள் ஒன்ருகப் படித்திருக்கிறேம். இதை நீங்க்ள் அவரைக் கண்டால் கேட்டுப் பார்க்கலாம். அது சரி என்ன சொல்லுகிறுர்? உங்கை பத்திரிகை இருக்கா?

கண்ணன்: பத்திரிகை இருக்கிறது! படிக்கட்டுமா சேர்?

ஆசிரியர்: ஓ...! தாராளமாக. இங்கை முன்னுக்கு வந்து நின்று படி. எல்லாரும் அமைதியாக இருந்து கேட்கவேண்டும். சுந்தரலிங்கம் ஒரு கணிதமேதை. நீங்கள் இதைக்

கவனமாகக் கேட்பதால் உங்கள் கணக்குப் பாடத்துக்கும் அது மிகவும் உதவியாக இருக்கும். இதோ படிப்பதைக் கேளுங்கள்.

கண்ணன்: (படித்தல்) தமிழ் மக்களுக்கு சுந்தரலிங்கத்தின் வேண்டுகோள்! இனியாவது உணருங்கள். விழிப்போடு ஒரு முடிவுக்கு வாருங்கள். யாழ்ப்பாணம் யூன் 19...

[வகுப்பு முடிந்ததற்கான மணி அடிக்கிறது]

ஆசிரியர்: சரி கண்ணன் நிறுத்து. இந்தப் பத்திரிகையை நீ படித்துவிட்டாய் தானே?

கண்ணன்: ஓம் சேர்!

ஆசிரியர்: அப்படியானுல் அதை என்னிடம் தா! (வெளியே அடுத்த பாட ஆசிரியர் வருவதைக் கண்டு) இப்பொழுது இன்றைய பாடம் உங்கள் எல்லாருக்கும் விளங்குதுதானே! நாளைக்கு அடுத்த பாடத்துக்குப் போவோம். (போகிருர்)

# திருமணப் பரிசு

'திருமணம் செய்பவர்களுக்குப் பரிசு' இந்தச் செய்தித் தலைப்பை அன்று பத்திரிகையில் கண்டதும், அந்தப் பரிசுக்காகவே நானும் திருமணம் செய்துகொள்ளலாமா என்ற எண்ணத்துடன் மேற்கொண்டு அச்செய்தியைப் படிக்கலானேன். ஆனால் பரிசு என்ன என்பதை அறிந்ததும் எனக்கு ஒரே ஏமாற்றமாகப் போய்விட்டது. அது ஒரு குடும்பக் கட்டுப்பாடு பற்றிய புத்தகமாம்!

முழு விவரமும் இதுதான்—

இலங்கை அரசாங்கம் இனிமேல் திருமணம் செய்து கொள்ளும் ஒவ்வொரு தம்பதிகளுக்கும் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய நூல் ஒன்றை இலவசமாக வழங்கவிருக்கிறதாம். இப்பரிசு திருமணப்பதிவு அதிகாரிகள் மூலமாக திருமணம் பதிவானதும் அவர்களுக்குக் கொடுக்கப்படுமாம்.

'திருமணப்பரிசு ஒரு டிரான்சிஸ்டர் றேடியோவாகவோ அல்லது ஒரு ஸ்கூட்டராகவோ இருக்கக்கூடாதா?' என்ற ஆர்வத்தோடு செய்தியைப் படித்த எனக்கு இது எப்படி இருக்கும்? நான் திருமணம் செய்தால் இதைவிடச் சிறந்த பல நூல்களை நண்பர்கள் பலர் திருமணப் பரிசாகத் தரக்

காத்திருக்கிறுர்களே! அந்தப் பரிசுகளோடு ஒப்பிடும்போது அரசாங்கத்தின் இந்தப் பரிசு எனக்கு எம்மட்டு?

அரசாங்கத்தின் இத்திருமணப் பரிசின் நோக்கம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பரவச் செய்வதே தவிர திருமணங்கள் செய்வதை ஊக்குவிப்பதல்ல. அந்தப் பரிசு நூலில் அளவோடு குழந்தைகளைப் பெறவேண்டியதன் அவசியமும், குழந்தைகள் பிறக்காமல் இருப்பதற்கான வழிகளும் கூறப்பட்டிருக்கும் எனத் தெரியவருகிறது.

அப்படியானுல் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் அவசியம்பற்றி இனிமேல் திருமணம் செய்பவர்களுக்கு மட்டும் விளக்கிஞல் போதுமென அரசாங்கம் நினைக்கிறதா? கடந்த காலங்களில் திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் அல்லவா அவர்களது முகவரிகளைத் தேடிப்பிடித்து இந்நூல்களை அனுப்ப வேண்டும். இல்லாவிட்டால் புதுத் தம்பதிகள் அளவோடு குழந்தைகளைப் பெற்றுக் கொண்டிருக்கும் அதே சமயம் அவர்களோ அளவுக்கதிகமான குழந்தைகளைப் பெற்றுத் தள்ளி அரசாங்கத்தின் நோக்கத்தைப் பாழாக்கி விடுவார்களே!

இது இவ்வாறிருக்க, இல்லற வாழ்வில் புகும் எல்லாருக்குமே இனிமேல் 'குடும்பக் கட்டுப்பாடு' பற்றிய நூல் இனமாகக் கிடைக்குமென்றுலும் அவர்கள் எல்லாரும் நிச்சயம் அதைப் படிப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இப்படி நான் சொல்லுவதற்குப் பல காரணங்கள் உண்டு.

(1) திருமணமான புதிதில் இதற்கெல்லாம் அவர்களுக்கு நேரம் கிடையாது.

(2) குடும்பம் என்று ஆகிவிட்டால் அவர்களுக்கு வேறு பல முக்கிய பொறுப்புக்கள் வந்து விடுமல்லவா?

(3) 'குடும்பக் கட்டுப்பாடு' பற்றிய அந்த நூல் நாவல்களைப் போலவோ அல்லது சினிமாச் செய்திகளைப் போலவோ படிக்கப் படிக்க ஆவலைத் தூண்டும் ஒரு சுவையான நூலாக இருக்கமாட்டாது,

இன்னும் தெளிவாகச் சொல்லப் போனுல் எத்தனையோ பேர்கள் இந்த நூலைத் தாங்கள் உத்தியோகங்களில் இருந்தும் - பிள்ளைகள் பெறுவதிலிருந்தும் பென்சன் எடுக்கும் காலங்களில்தான் படிப்பார்கள். இப்படி நடந்தால் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் எதிர்பார்க்கும் வெற்றியைத் தரமாட்டாது அல்லவா? இதைத் தவிர்க்க அரசாங்கம், பரிசு நூல் வழங்கப்பட்ட சகலருக்கும் இரண்டு ஆண்டுகளின் பின் நூலை அவர்கள் சரியாகப் படித்திருக்கிருர்களா என்பதை அறியும் முகமாக ஒரு பரீட்சை வைக்கலாம். அந்தப் பரீட்சைக்குத் தோன்றுவது அவர்களுக்குக் கட்டாயமாக்கப்படுவதுடன், அதில் தேறியவர்களுக்குப் புத்தகங்கள் அல்லாத வேறு பரிசுகளும் வழங்கலாம் என்பது என் கருத்து.

நிற்க, குடும்பக் கட்டுப்பாடு பற்றிய நூல் இளம்சந்ததியினரின் - குறிப்பாக காதலித்துக் கொண்டிருப்பவர்களின் கண்களில் பட்டுவிட்டால் அதனுல் விபரீதமான பலன்கள் உண்டாகலாம். ஆனுல் எப்படித்தான் ஒழித்து மறைத்து வைத்திருந்தாலும் அவர்களும் இதனைப் படிக்காமலோ விடப்போவதில்லை. இந்த அபாயத்தை நினைக்கும்போது எனக்கு இன்னெரு வழி தோன்றுகிறது. அதாவது நூல்கள் வழங்கும் திட்டத்தை நிறுத்திவிட்டு, ஒவ்வொரு மாதக் கடைசி நாளன்றும் ஒரு மண்டபத்தை ஒழுங்குசெய்து, அந்த மாதத்தில் திருமணம் செய்துகொண்ட அத்தனை பேர்களையும் 'பிடி விருந்தில்' அங்கு அழைத்து, குடும்பக் கட்டுப்பாடு பற்றி அவர்களுக்கு ஒருவர் 'லெக்சர்' அடிக்கலாமே! இதனுல் படிக்கத் தெரியாதவர்களும்கூடப் பயனடையலாம் அல்லவா?

ஏற்கனவே உத்தேசித்தபடி குடும்பக் கட்டுப்பாடு நூல் விநியோகத்திட்டம் நடந்துதான் ஆகும் என்றால், அதனால் அரசாங்கத்துக்கு ஏற்படப்போகும் பணச்செலவுகளைச் சரிக் கட்டுவதற்கும் ஒரு யோசனை கூறப்போகிறேன். அதைக் கேட்டுவிட்டு, ஓர் எழுத்தாளனின் புத்தி அப்படித்தான் இருக்கும் என்று நீங்கள் சொல்லக்கூடாது.

அதாவது அந்த நூலில் விளம்பரங்களையும் சேர்த்தால் நல்லது என்பதையே சொல்ல வந்தேன். வருங்காலத்தில் அநேகமாக இலங்கையில் உள்ள எல்லா வீடுகளிலுமே இடம்பெறப்போகும் அந்த நூலுக்கு விளம்பரம் கொடுப்ப தென்றால் வர்த்தகர்கள் போட்டி போட்டுக்கொண்டல்லவா முன்வருவார்கள். ஆனால் அந்த விளம்பரங்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு இடையூறு செய்யக் கூடியன வாக அமையாது கவனித்துக்கொள்ள வேண்டும்.

இதையெல்லாம் விடச் சிறந்த முறையில் குடும்பக் கட் டுப்பாட்டுத் திட்டத்தை அமுல் செய்வதற்கு நான் இன்னு மொரு அரிய வழியையும் இதோ கூறுகின்றேன்.

'திருமணம் செய்பவர்களுக்குப் பரிசு' என்பதை விட்டு விட்டு 'திருமணம் செய்யாதவர்களுக்குப் பரிசு' என அரசாங் கம் அறிவிப்பதுதான் அந்த அரிய வழியாகும். அப் பரிசு டிரான்சிஸ்டர் றேடியோ ஸ்கூட்டர் போன்றவைகளாக இருக்கவேண்டும். (அப்படியானால் நிச்சயம் எனக்கும் ஒரு பரிசு கிடைக்கும்!) அதே சமயம் குடும்பக் கட்டுப்பாடு பற்றி அரசாங்கம் அச்சிட்டு வைத்திருக்கும் அத்தனை நூல்களையும் தூக்கி இந்து சமுத்திரத்தில் எறிந்துவிட வேண்டும் (அதற்கு வேண்டுமானால் நானும் ஒரு கை பிடிக்கலாம்) எதற்காக அப்படிச் சொல்லுகிறேன் என்பது தெரியும் தானே?

# பக்கத்து வீட்டு றேடியோ

"என்ன காணும் உம்முடைய கட்டுரைகளை வெகுநாட்களாகப் பத்திரிகைகளில் காணவில்லையே? ஏன் கற்பனை வறண்டு விட்டதா? அல்லது கொழுவிறதற்கு ஆட்கள் எவரும் கிடைக்கவில்லையா?'' என்ருர் பக்கத்து வீட்டுப் பரமலிங்கம். அவர் எப்பொழுதும் என்மீது மிகுந்த அக்கறை கொண்டவர் போலவும் அன்பு கொண்டவர் போலவும் நடந்து கொள்பவர். எங்கே தன்னைப் பற்றியும் ஏதாவது எழுதி விடுவானே என்ற பயம்தான் இதற்கெல்லாம் காரணம் என்பது எனக்குத் தெரியாமலா போய்விடும்?

'எதை எழுதுவது' என்று எண்ணிக் கொண்டிருந்த எனது சிந்தனை சிறகுகட்டிப் பறந்தது. பக்கத்துவீட்டுப் பரமலிங்கத்தைப் பற்றியே - அவரது ரேடியோவைப் பற்றியே எழுதுவது என்று முடிவு கட்டிவிட்டேன். பாவம், பரமலிங்கம்...!

ஒருநாள் பரமலிங்கம் வீட்டிலே மிகுந்த பரபரப்பாக இருந்தது. ஒருவர் மாமரத்தில் ஏறிக்கொண்டிருந்தார். இன்னொருவர் வீட்டுக் கூரையில் இருந்தார். பரமலிங்கத்தின் சுட்டிப்பயல் நிலத்தைத் தோண்டிக் கொண்டிருந்தான். பெண்களும் அங்கிங்கு என்று ஓடித்திரிந்தனர்.

வழக்கத்திற்கு மாருக வேட்டியை மடித்துக் கட்டியபடி மூக்குக்கண்ணுடியுடன் உலாவிக்கொண்டிருந்த பரமலிங்கத்தை 'என்ன சங்கதி' என்று விசாரித்தேன். அவர் அங்கு அடுத்தநாள் ரேடியோ வரப்போகிற செய்தியை வாயெல்லாம் பல்லாகச் சிரித்தபடி சொன்னுர்.

அடுத்தநாள் அவரது விருந்தையில் ரேடியோவைப் பார்க்கவென்றும் நிகழ்ச்சிகளைக் கேட்கவென்றும் ஒரு பத்துப் பேர்கள்வரை கூடியிருந்தனர். அவர்கள் பாவம் பரிதாபத்துக்குரியவர்கள். அவர்கள் எந்த ஒரு நிகழ்ச்சியையும் தொடர்ந்து முழுவதுமாகக் கேட்காதவாறு பரமலிங்கம் அடிக்கடி கொழும்பு, திருச்சி, சென்னை என்று மீட்டரை மாற்றிக்கொண்டும், வேண்டாத ஒலிகளை உண்டாக்கிக் கொண்டும் நிகழ்ச்சிகளைக் கொலை செய்துகொண்டிருந்தார். இப்படி அவர் நிகழ்ச்சிகளில் கொலைத்தொழிலை மேற்கொள்ளுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று—

அவருக்கு வானெலி மீட்டர்களைச் சரியாக விடத் தெரியாதது. இன்னும்கூட 'மீட்டர்' 'வேவ்பாண்ட்' என்பனவெல்லாம் பரமலிங்கத்துக்குப் புரியாத புதிராகத் தான் இருந்து வருகிறது. இது சம்பந்தமாக அவரது வாய் அடிக்கடி முணுமுணுக்கும் வார்த்தைகளாவன: முதலாம் கட்டை, இரண்டாம் கட்டை, மூன்ரும் கட்டை!

இரண்டு—

நிகழ்ச்சிகளை இன்னும் இன்னும் தெளிவாகக் கேட்பதாக இருந்தால் என்ன செய்யவேண்டும் என்ற அவரது ஆராய்ச்சி அதுவரை முடியவடையாதது!

இந்த நிகழ்ச்சிகள் பரமலிங்கத்தின் வீட்டில் மூன்று நான்கு வாரங்கள் தொடர்ந்து நீடித்தது.

பரமலிங்கத்தின் வானெலிப்பெட்டி அப்படி ஒன்றும் உயர்ந்த வகையைச் சேர்ந்ததல்ல. ஏதோ விரலுக்குத்

தகுந்த வீக்கந்தான். ஆனால் பரமலிங்கம் இந்த உண்மையை மறந்தும் ஒப்புக்கொள்வதில்லை. வானொலியில் இருந்து வேண்டாத இரைச்சல்களும் சப்தங்களும் வெளி வந்து நிகழ்ச்சிகள் தெளிவாகக் கேட்காதபோதெல்லாம் அதற்கான காரணங்களை அவர் காட்டுவார். கொழும்பில் சரியான மழை பெய்கிறது, திருச்சியில் இடி இடிக்கிறது, சென்னையில் மின்னல் போன்றவைகள் அவர் காட்டும் காரணங்களில் சிலவாகும். 'என்ன செய்வது எனது வருவாய்க்குத் தகுந்த வானொலிதானே! குறைகள் இருக்கத்தானே செய்யும்?' என்று மட்டும் அவர் கூற மாட்டார். தான்வாங்கியது எவ்வளவு மட்டமானது என்றாலும் அதுதான் மிக உசத்தியானது என்று சாதிப்பதுதான் பரமலிங்கத்தின் கொள்கையாயிற்றே!

இப்பொழுதெல்லாம் பரமலிங்கத்தின் வானொலிக்கு ஓய்வே கிடையாது. நள்ளிரவு தொடங்கி அதிகாலைவரையுள்ள சொற்ப நேரம் தவிர அவரின் பக்கத்து வீட்டுக்காரர்களாகிய எங்களுக்கெல்லாம் ஒரே தலைவலிதான். பரமலிங்கத்தின் பாலன் முதல் பாட்டிவரை வானொலிபோடக் கற்றுக்கொண்டு விட்டார்கள். அந்த வானொலிப்பெட்டி 'மரண அறிவித்தல்' தொடக்கம் 'மாதர் கேட்டவை' வரை எந்த நிகழ்ச்சியையும் விட்டுவைப்பதில்லை...

இந்த இடத்தில் எனது வாசக நேயர்களுக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். நான் எதற்காகச் சிலகாலங்களாக கட்டுரை எழுதவில்லை என்பதற்கு இந்தப்பக்கத்து வீட்டு வானொலிதான் காரணம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒருவேளை பரம லிங்கம் எங்கே நான் அவரைப்பற்றி கட்டுரைகள் ஏதாவது எழுதிவிடுவேனோ என்று பயந்துதான் றேடியோ வாங்கி எனக்கு உபத்திரவம் தந்துகொண்டிருக்கிறாரோ என்னவோ!

எனக்குத்தான் பரமலிங்கம் இப்படித் தொல்லை கொடுக்கிறாரே தவிர, எனது அயலிலுள்ள வானொலிப்பிரியர்களுக்கு


அவர் அனுகூலமே செய்து வருகிறார். அவரின் வானொலி சதா உச்சக்கட்டத்தில் அலறுவதால் 'வானொலிப்பெட்டி ஒன்று வாங்கவேண்டும்' என்ற எண்ணத்துடனிருந்த எமது ஏழெட்டு அயலவர்கள் அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டனர். இன்னும் நாலைந்து வீடோ ஏற்கனவே தங்களிடமிருந்த பெட்டிகளையும் விற்றுவிட்டனர். 'நமது பரமலிங்கத்தின் ரேடியோ இருக்கும் போது பிறகு எமக்கென்று வேறாக எதற்கு?' என்கிறார்கள் அவர்கள். இவர்கள் எல்லாரும் வானொலியில் ஏதாவது கேட்க வேண்டுமானால் அப்பொழுது தமது காதுகளையும் கவனங்களையும் பரமலிங்கத்தின் வீட்டுப் பக்கமாகத் திருப்பப் பழகிக் கொண்டு விட்டனர்.

இறுதியாக இக்கட்டுரையை முடிக்குமுன் இக்கட்டுரை எழுதுவதற்கு எனக்கு உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய 'றிப்பயர்' காரணமாக இரண்டு நாட்கள் வாயடைத்துப் போன பரமலிங்கத்தின் வானொலியும், அந்த 'றிப்பயர்' ஏற்பட ஒல்லும்வகை முயன்றுழைத்த பரமலிங்கத்தின் சுட்டிப்பயலையும் நன்றியறிதலுடன் நினைவு கூருகின்றேன்.

006053-

9
.8 Om:DO15
11.4 B245

# பொ. சண்முகநாதன்



ஏவரும் எளிதிற் பழகுவதற்கேற்ற இனிய பண்புகள் நிறைந்த திரு. பொ. சண்முகநாதன் சங்குவேலியைச் சேர்ந்தவர். இனஉணர்ச்சியும் தமிழுணர்ச்சியும் மிக்கவர். நாடறிந்த நல்ல நகைச்சுவை எழுத்தாளர்.

'கொழும்புப் பெண்' என்ற இவரது முதலாவது நகைச்சுவைக் கட்டுரைத் தொகுதி பேரறிஞர் டாக்டர் மு. வரதராசஞர், நாடோடி, ரீ. பாக்கியநாயகம் போன்ற பிரபல எழுத்தாளர்களது சிறப்பான பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது.

'சண்முகநாதன் ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளரும் ஆவர்' என்பதற்கோர் எடுத்துக்காட்டாக அவரது 'வெள்ளரி வண்டி' நூல் விளங்குகிறது.

**'பெண்ணே! நீ பெரியவள்தான்!'** என்ற இந்நூல் 'போஞச்சாஞ'வின் மூன்ருவது நூல்—இரண்டாவது நகைச்சுவைக் கட்டுரைத் தொகுதி!

— 'புத்தொளி'

அட்டை கன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்றது.